# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 14 ★ 4-8-57 சென்னை ★ விலை 16 காசு


# திருமங்கலத்தார் திருவாய்மொழி

ஒரு ஊரில் மோசடி வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தது.

வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர் அந்த ஊரிலேயே மிகப் பிரபலமாக விளங்கும் சீமான். வடக்குத் தெருவில் ஐந்தடுக்கு மாடியில் கோலு விற்றிருக்கும் பெரிய மனிதர் அவர். ஊரிலே அவரை இதுவரை எதிர்த்துப் பேசும் துணிவு எவருக்கும் பிறந்ததில்லை. மாளிகை வாசிகள் எவ்வளவு அநீதிகளை இழைத்தாலும் அக்கிரமங்களைச் செய்தாலும் ஊர் மக்கள் பொறுத்துக் கொண்டு இருந்தார்கள். சீமானை நம்பி வாழவேண்டிய நிலை அவர்களுக்கு! சீமான் காட்டிய முறிச் சீட்டில் கையெழுத்திட்டால், குத்தகைக்கு நிலங் கிடைக்கும், இல்லையானால் கும்பி காய்ந்து பட்டினி கிடக்கவேண்டுமே என்று ஊர்மக்கள் அந்த வயோதிகச் சீமானுக்கு பணிந்து வாழ்ந்தனன்.

வடக்குத் தெரு வயோதிகச் சீமானைப் பார்த்து மற்றவர்கள் பணிந்துபோன நேரத்தில், ஊரின் தென் கோடியில் ஒரு தென்னங்கொல்லையில் வேலைபார்க்கும ஏழை எதிர்த்துப் பேசினார். தனக்குச் சொந்தமான நிலத்தை சீமான் மோசடி செய்து எடுத்து விட்டதாகப் புகார் செய்ய ஆரம்பித்தான். தாய்தந்தையர் வைத்துவிட்டுப் போன நிலத்தை, தனது குடும்பத்தினருக்கு உரிமையுள்ள நிலத்தை, சீமான் வஞ்சகமாகப் பறித்துக்கொண்டதாக வழக்குத் தொடுத்தான். அந்த மோசடிக் குற்றச்சாட்டு விசாரணைக்கு வந்தது.

வாதிபக்கத்து வக்கில் தனது வழக்கை எடுத்துச் சொன்னார். அந்த நிலம் ஏழைக்குச் சொந்தமான நிலம் என்பதற்கு ஆதாரங்களைக் காட்டினார். மறைக்கப்பட்ட பத்திரங்கள், அழிக்கப்பட்ட வரப்புகள், பதுக்கப்பட்டிருக்கும் வருவாய்கள், வஞ்சிக்கப்பட்ட சொத்துக்கள் இவைகளை விவரமாக எடுத்துரைத்தார்.

வாதியின் வக்கில் சொன்ன குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல சீமான் அனுப்பிய வக்கீல் எழுந்தார், கனைத்துக்கொண்டார், பேசஆரம்பித்தார். வார்த்தைகளைச்சுடச்சுட வீசினார், கண்களில் கோபம் கொப்பளித்தது. அவர் அவ்வளவு கடுமையாகப் பேசியது வழக்கைப்பற்றியல்ல; எதிர்தரப்பு வக்கீலைப் பற்றி! "இவனுக்கு என்ன தெரியும், வழக்காடத் தெரியுமா? சட்டம் தெரியுமா, சீமானின் அருமைபெருமை தெரியுமா? இந்தக் கோர்ட்டுக்கு வரவே இலாயக்கற்றவன்" என்று கண்டபடி தாறுமாறுகப் பேசினார்.

என்ன பேசுகிறார் என்பது புரியாத சீமானின் ஆட்கள், ''ஆகா; நமது வக்கீல் எவ்வளவு சத்தம் போட்டு, காரசாரமாகப் பேசினார்!'' என்று பெருமைப்பட்டுக்கொண்டார்கள்.

சீமான் வக்கில் பேச்சை முடித்து வெளியே வந்தார். அவருடைய நன்பர் ஒருவர் அருகில் வந்து "என்ன, எதிர்தரப்பு வக்கீலைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்து விட்டீர்கள். வழக்கைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை!" என்று கேட்டார்.

சீமான்வக்கீல் சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டு சொன்னார். "ஆமாம், வழக்கைப் பற்றி நாம் என்ன பேசமுடியும்? அவன் சொல்வதெல்லாம் உண்மை. அப்படியிருக்கும் பொழுது நான் செய்ததுதான் சரி. வழக்கைப் பற்றி ஒன்றும் பேச முடியாவிட்டால், வழக்காடுபவனைப்பற்றி பேசிவிட வேண்டும்!"

வழக்கைப்பற்றி பேசமுடியாமல் வழக்காடுபவனைப்பற்றிப் பேசஆரம்பித்த சீமான் வீட்டு வக்கீலைப்போல, திராவிட முன்னேற்றக்கழகத்தினரின் சொல்லும் கொள்கைகளை மறுத்துப்பேச முடியாமல் அவ்வாறு சொல்பவர்களைப் பற்றி தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் பேச ஆரம்பித்துள்ளார்.

வடக்குத்தெரு வயோதிகச்சீமானின் நிலையில் வடநாட்டு ஏகாதிபத்தியம்இருக்கிறது. தென்னங் கொல்லையில் வேலை பார்க்கும் ஏழையின் நிலையில் நாம் இருக்கிறோம். தனது நிலத்தை மோசடியாகச் சீமான் எடுத்துக் கொண்டதாக அவன் குற்றஞ் சாட்டினான். நமது தாயகத்தை, ஆண்ட திருநாட்டை, வடநாடு அடிமைப்படுத்தி, அரசியலில் பெரியதொரு வஞ்சகம் புரிவதாகக் குற்றஞ்சாட்டுகிறோம்.

நாம் உரிமையுடன் வாழ்ந்த வகையைக் காட்டுகிறோம், இனியும் உரிமையுடன் வாழ முடியும் என்பதைக் கூறுகிறோம். வரலாற்று ஆதாரங்களைக் காட்டுகிறோம், வாழ்க்கைநிலையிலுள்ளப் பேதங்களைக் காட்கிறோம், டுபொருளாதார ஏற்றத் தாழ்வு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

## பெரிய மனிதன்!

★

''நீங்கள் சந்தித்த மிகப் பெரிய மனிதர் யார்?'' இலண்டனில் நடந்த விருந்து ஒன்றில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. விருந்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் தங்களுக்குப் பிடித்தமான பெரிய மனிதர்களின் பெயர்களைச் சொல்ல ஆரம்பித்தார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த லூயி டக்ளஸ் என்பவர் கீழ்க்கண்டவாறு கூறினார்.

''நான் சந்தித்த பெரிய மனிதனின் பெயரை இதற்குமுன் நீங்கள் கேள்விப் பட்டிருக்கமாட்டீர்கள், அவன் மெக்சிகோ நாட்டில் இருந்த ஒரு ஏழை சிவப்பு இந்தியன், பெயர் சேசு கார்சியா. வட மெக்சிகோவில் நாகசாரி என்ற சிறு நகருக்கு சென்றபொழுது அவனை நான் பார்த்தேன். அந்த ஊரிலிருந்து 6 மைல் தூரத்தில் ஒரு செப்புச் சுரங்கம் இருந்தது. ஒரு இரயில் பாதை சுரங்கத்துக்கும நகருக்கும் தொடர்பு உண்டாக்கியது. கார்சியா அந்த ரயிலை ஓட்டி வந்தான். நகரத்திலிருந்து வேலையாட்களையும் பாதைகளைப் பிளப்பதற்காக வெடி மருந்துகளையும் ஏற்றிச் சென்று; திரும்பும் பொழுது வெட்டப்பட்ட செப்புக்கனிகளையும் ஏற்றிவருவது வழக்கம். அந்த ரயில்வே நிலயத்தைச் சூழ்ந்து நகரத்தின் வீடுகளும் பள்ளிக்கூடங்களும் மருத்துவ நிலையங்களும் இருந்தன. ஆக சிறுபையனுக இருந்த நான் கார்சியாவை அடிக்கடி பார்ப்பதுண்டு. உயரமாக புன்முறுவலுடன் அவன் ரயிலை விட்டு எப்பொழுதும் இறங்கி வருவான்.

ஒருநாள் இரயிலில் வெடி மருந்துகளை ஏற்றிவிட்டு, கார்சியா கீழே நின்று நன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான் திடிரென்று "இரயிலில் தீ! தீ!'' என்று கூக்குரல் வந்தது. திரும்பிப்பார்த்தால் வெடி மருந்துப் பெட்டிக்கு அருகில் தீ கொழுந்து விடுவது தெரிந்தது. அணைக்க நேரமில்லை. இரண்டொரு நிமிடங்களில் வெடிமருந்து பிடித்துக்கொள்ளும். அவ்வளவு வெடிமருந்தும் வெடித்தால் ஊர் பாழ்தான். நின்றுகொண்டிருந்தவர்கள் திகைப்பால் செய்வதறியாமல் நின்றுர்கள், ஓடினார்கள்,

கார்சியா தனது பக்கத்திலிருந்தவனின் கையை அழுத்தி "அப்பாவிடம் சொல்லிவிடு, நான் போகிறேன் கடைசி வணக்கம்!'' என்று சொல்லிவிட்டு, என்ஜின் வண்டியில் தாவிக்குதித்து, ஓட்ட ஆரம்பித்தான். வண்டி வேகமாக நகர்ந்தது, ஓடியது, வேகமாக, வேகமாக!

இரண்டுமூன்று நிமிடங்கள் கழித்து பெரிய வெடிச்சத்தம் கேட்டது. தூரத்தில் வண்டி போய்க் கொண்டிருந்த திக்கில் புகை எழுந்தது.

நாங்கள் ஓடிப்போய் பார்த்தோம். வண்டியோ கார்சியாவோ எதுவும் தெரியவில்லை. பெரிய வெடிவிபத்தில் எல்லாம் சிதறிக்கிடந்தன. கார்சியாவின் செய்கையால், அந்த நாகசாரி ஊரும், அதிலிருந்தநாலாயிரம் மக்களும் குழந்தைகளும் காப்பாற்றப்பட்டனர்.

நான், சந்தித்த பெரிய மனிதன் அந்தக் கார்சியாதான்!''




வினு: பெரியார் கற்றுக்கொடுத்த பாடத்தை மறந்துவிட்டுப் பார்ப்பனரின் தொடர்பைக் கொள்ளுவது ஏன்?

விளக்கம்: பெரியார் இராமசாமி அவர்கள் கற்றுக்கொடுத்த நல்ல பாடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் எப்போதும் மறந்ததுமில்லை; இனி மறக்கப்போவதுமில்லை.

நாட்டுக்கேற்ற சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களைக் கற்பித்த பெரியாரைப், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பிய பெரியாரைக், காலத்தோடு ஒத்துவராத பழமையையும், மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் வெறுத்து எதிர்த்தொழிக்க கற்றுக்கொடுத்த பெரியாரை, எளிமையாகவும் இனிமையாகவும் அழகாகவும் பேசும் மேடைப்பேச்சு ஆற்றலை முன்னைய நாட்களில் நல்ல முறையில் வளர்த்த பெரியாரை, எல்லாத் துறைகளிலும் உரிமை வேட்கையைக் கிளரிவிட்ட பெரியாரைத் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் போற்றிப் புகழவே செய்கிறோம். ஆனால் யதேச்சாதிகாரம் கொண்ட சர்வாதிகாரப் பெரியாரை, சனநாயகத்திற்கு மதிப்புத்தராத பெரியாரை, கழகம் என்பது தமக்குச் சொந்தமான ஒரு அமைப்பு ஆகும் என்று கூறும் பெரியாரை, கழகத்தில் முட்டாள்கள் மட்டுமே சேர்ந்தால்போதும் படித்த அறிவாளிகள் சேர வேண்டாம் என்று கூறிடும் பெரியாரை, தாம் கூறிவந்த கொள்கைகளுக்குமாருகத் 'திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு' என்ற முறையில் பொருந்தாத் திருமணம் செய்து கொண்ட பெரியாரை விட்டு விலகிச் செல்லவே நாம் விரும்புகிறோம்.

பெரியாரும் நாமும் நன்ருக ஒரே இயக்கத்தில் ஈடுபட்டு பணிபுரிந்து வந்த காலங்களில் "நாம் பார்ப்பனியத்தைத் தான் வெறுக்கிமுேமே யல்லாமல், பார்ப்பனரையல்ல. எந்தத் தனிப்பட்டபார்ப்பனரிடத்தும் தமக்கு வெறுப்பு விரோதம் இல்லை" என்றுதான் பெரியார் அவர்கள் நூற்றுக்கணக்கான மேடைகளில் கூறி வந்துள்ளார். அன்று அவர் கற்றுக்கொடுத்த அந்தப் பாடத்தை நல்ல பாடம் என்றே நாம் ஏற்றுக்கொண்டோம். அந்த நல்ல பாடத்தை நாம் இன்னமும் மறக்காமலும் மறுக்காமலும் மறைக்காமலும் நல்ல முறையில் கடைப்பிடித்து வருவதிலேதான் கவனம் செலுத்தி வருகிறோம். ஆனல் பெரியார் இராமசாமி அவர்களும், அவரைச் சார்ந்தவர்களுக்கும்தான் அந்தப் பாடத்தை மறந்துவிட்டு ஒன்றிற்கொன்று முரண்பாடான பல்வேறு பாடங்களை நாளுக்கு நாள் புதுப்பித்துக்கொண்டு படித்து வருகின்றனர்.

பெரியார் அவர்கள் பார்ப்பன வழக்கறிஞரை ஈரோட்டில் தமக்கு வழக்கறிஞராக வைத்துக் கொண்டிருந்த போதும், மாவூர் சர்மா அவர்கள் மாளிகையில் தங்கிப் பயிற்சி பள்ளி நடத்தி அவரோடு உறவாடி மகிழ்ந்திருந்தபோதும், சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களைத் தம் நெருங்கிய நண்பராகக் கொண்டு அவரைப் போற்றிப் புகழ்ந்து வந்த போதும், "நான் தனிப்பட்ட பார்ப்பனரை வெறுக்கவில்லை. நான் பார்ப்பனியத்தைத் தான் வெறுக்கிறேன். ஆகையால் தான் நான் எவ்வளவோ பார்ப்பனர்களை நண்பர்களாகக் கொண்டிருக்கிறேன்" என்று பெரியார் அவர்கள் கூறிவந்துள்ளார்கள்.

மூன்று நான்கு ஆண்டுக் காலத்திற்கு முன்னல், சென்னை இலட்சுமிபுரம் யுவர் சங்கம் என்னும் பார்ப்பனர்களே மிகவாக நிரம்பிய அமைப்பின் கூட்டம் ஒன்றில் பேசும் போது பெரியார் அவர்கள் தாம் பார்ப்பனர்களை வெறுக்கவில்லை என்றும், பார்ப்பனியத்தைத் தான் வெறுக்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

இப்படியெல்லாம் நல்ல பாடத்தைக் கற்பித்து வந்த பெரியார் அவர்கள் தான் சென்ற சில ஆண்டுகளாகப் பார்ப்பனரை விரட்டுங்கள் என்றும், பார்ப்பனரைக் குத்திக் கொல்லுங்கள் என்றும், பார்ப்பனர் வீடுகளை நெருப்பு வைத்துக் கொளுத்துங்கள் என்றும் கூறிவரத் தலைப்பட்டார். இந்தக் கொள்கையிலாவது அவரோ அல்லது அவரைச்சார்ந்தவர்களோ நிலையாக நின்ருர்களா என்ருல், அதுவும் இல்லை. பெரியார் அவர்களும், அவரது சீடர்களும் பார்ப்பனரைப் புகழ்ந்து பேசாமலும், அவர்களோடு நட்புறவு கொள்ளாமலுமாவது இருந்தார்களா என்ருல், அதுவும் இல்லை. அரசியல் உலகில் முன்னுக்குப் பின் முரண்பட்டவர் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு வேண்டுமென்ருல், அவர் பெரியார் இராமசாமியே ஆவார்கள்.

பார்ப்பனரை விரட்டுவோம் ஓட்டுவோம் வெட்டுவோம் குத்துவோம், என்று பொதுத் தேர்தலுக்கு முன்பெல்லாம் கூறிக்கொண்டிருந்த திராவிடக் கழகத்தார்களெல்லாம், பொதுத் தேர்தல் காலத்தில், பச்சைப் பார்ப்பனர்களென்று அவர்களாலேயே தூற்றப்பட்ட சென்னை டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காஞ்சிபுரம் டாக்டர் சீனிவாச அய்யர் குடந்தை சம்பத் அய்யங்கார், திருவரங்கம் வாசுதேவ அய்யங்கார், பட்டுக்கோட்டை சீனிவாச அய்யர் மதுரை சங்கர அய்யர், ஆர். வெங்கட்டராம அய்யர், போன்று பலரையும போற்றிப் புகழ்ந்ததோடு, அவர்களுக்காகப் பொது மக்களிடத்தில் வாக்குகள் கேட்டு வாங்கிக் கொடுத்துப், பச்சைத் தமிழர்களின் பிரதிநிதிகளாகச் செல்வதற்கு அருந்துணையாக இருந்தார்கள். எந்தப் பார்ப்பனர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள்-ஒழிக்கப்பட வேண்டியவர்கள்-விரட்டப்பட வேண்டியவர்கள்-குத்தப்பட வேண்டியவர்கள், என்று பெரியாரால் தூற்றப்பட்டு வந்தார்களோ, அந்தப் பார்ப்பனர்களோடு நெருங்கிய உறவை இன்று ஏற்படுத்திக் கொண்டிருப்பவர் பெரியார் இராமசாமியே ஆவார்கள்.

பெரியாரும் நாமும் ஒன்ருக இருந்த காலத்தில் பார்ப்பனியத் தன்மைகளை விட்டுவிட்ட பார்ப்பனர்களை அதாவது மனிதர்களை எப்படித் திராவிடக் கழகத்தில் உறுப்பினராக்கிக் கொண்டோமோ, அப்படியேதான் திராவிட முன்னேற்றக் கழகமும் பார்ப்பனியத் தன்மைகளை விட்டுவிட்ட பார்ப்பனர்களைத் தம் கழகத்தில் உறுப்பினராக்கிக்கொள்ள இசைந்து; அதற்கிணங்க பணியாற்றி வருகிறது. பார்ப்பனியக் கோட்பாடுகளுக்கு அடிமைப்பட்ட வைதீகக் கோட்பாடுகளைக் கொண்ட முதலியார்கள், செட்டியார்கள், நாய்க்கர்கள், படையாட்சிகள், கோனர்கள் போன்றவர்களைச் சீர்திருத்தி, அவர்களை எப்படிக் கழகத்தில் உறுப்பினராக்கிக்கொள்ள இசைகிறோமோ, அப்படியேதான் வைதீகப் பார்ப்பனர்களையும் சீர்திருத்தி அவர்களையும் கழகத்தில் உறுப்பினராக்கிக் கொள்ளலாம், அதில் தவறில்லை என்கிறோம.

ஒருவன்பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்துவிட்டது அவனுடைய குற்றமாகாது; அது அவன் அறிந்து உணர்ந்து செய்த செயலாகாது. ஒரு பார்ப்பனன் தன்சாதிக்குவழக்கமாகப் படிந்துவிட்ட சில வேண்டத்தகாத பண்புகளை அறவே உதறித் தள்ளிவிட இசைந்து, திராவிடத்திற்குரிய குடிமகனுக விளங்க அவன் விரும்பி முன்வருவானேயானல், மற்ற சாதிகளிலிருந்து வருபவர்களை ஏற்றுக்கொள்ளுவதுபோல், அவனையும் ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் தி. மு. கழகம் கருதுகிறது. பார்ப்பனீயத்தை மட்டுமே வெறுக்கக் கற்றுக்கொடுத்த பெரியாரின் பாடத்தைத்தான் தி. மு. கழகம் இன்றளவும் கடைப்பிடித்து வருகிறது. ஆனல் அவரும், அவரைச் சார்ந்தவர்களுந்தான் அந்தப் பாடத்தைச் சிற்சிலபோது மறந்தும், சிற்சில சமயங்களில் முரண்பட்டும் நடந்துகொள்ளுருர்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் வரதராசுலு

தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அடிப்பைக் காரணமாக விளங்கியவர்களிலே முக்கியமான ஒருவரும். தமிழ்ச் செய்தித் தாள் உலகைச் செவ்வையாக்கிச் சீர்படுத்திப் பல எழுத்தாளர்களுக்கு ஆசிரியராயும் எடுத்துக்காட்டாயும் விளங்கியவரும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவரும், தொழிலாளர் நலன் கருதி உழைத்துவந்த வரும், பிற்படுத்தப்பட்ட மக்கள்—ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேற்றத்துக்கு அரும்பாடுபட்ட வரும் யாருக்கும் அஞ்சாமல் துணிந்த செயலாற்றும் தியம் படைத்த வரும், மாற்றுக் கட்சியினராலும் நன்கு மதிக்கப்பட்டவருமான அருந் தலைவர் டாக்டர் வரதராசுலு அவர்கள் இயற்கை செய்திய செய்தி கேட்டுத் திடுக்குற்றேன்.

துக்கமும் துயரமும் உள்ளத்தைக் குடைக்கின்றன. தமிழகம் ஒரு அரசியலறிஞரை இழந்து தவிக்கும் நிலை அவரது இழப்பால் ஏற்பட்டுள்ளது. அவரைப் பிரிந்து வருத்தும் அவரது குடும்பத்தினருக்கும், உற்ருர் உறவினர், நண்பர் ஆகியோருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிரேம்.

அவரது தொண்டுகள் பிறர்க்கு எடுத்துக் காட்டுகளாக அமையுமாக! அவரது பெயரும், புகழும் நீடூழிக்காலம் நிலைபெறுவதாக!

மன்றம்

ஞாயிறு 4—8—57 சென்னை

# மாணவர் அரசியல்

சென்னை சட்டசபையில் பேசிய கனம் சுப்பிரமணியம் அவர்கள் எதிர்க்கட்சியிலிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்து "மாணவர்களை அரசியலுக்கு இழுக்காதீர்கள்!" என்று அறிவுரை பகன்றுள்ளார். கல்வி அமைச்சர் என்ற முறையில் மாணவர்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் சுப்பிரமணியம் அவர்கள் அதை எச்சரிக்கையாகவோ, அறிவுரையாகவோ தந்துள்ளார். அந்தச் செய்தியை வெளியிட்ட பத்திரிக்கைகள் பலவிதங்களில் தலைப்புக் கொடுத்தன. இருந்தாலும், "அரசியலுக்கு மாணவர்களை இழுக்காதீர்கள்" என்ற அடிப்படைக் கருத்து அவருடைய வேண்டுகோளில் இருக்கிறது.

திடிரென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்து அந்த வேண்டுகோளை விடுக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது என்று நமக்குப் புரியவில்லை. தென்னாட்டில் அதுவும் சென்னை மாநிலத்தில் மாணவர்கள் அமைதியுடன் தான் இருக்கிறார்கள். அவர்களுடைய கல்லூரி வாழ்வை அமைதியற்றதாக்கும் நிலைமை, அரசாங்கத்தினராலும் அதிகாரத்திலிருப்பவர்களாலும் ஓரோர் சமயம் உண்டாக்கப்பட்டபோதிலும், எதிர்க்கட்சிகள் அந்தச் செயலில் ஈடுபடவில்லை. அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய பொல்லாங்கை என்றும் கருத்தில் கொண்டதில்லை. தென்னாட்டில் மாணவர்கள் அமைதியுடன் தம் கல்வியைப் பெறுவதில் இடையூறு நிகழவில்லை, அரசியலால்!

வடநாட்டில் மாணவர்களிடை அடிக்கடி அமைதியின்மை தோன்றி, அமளிகள் மூளுகின்றன. பாட்னாவில் மாணவர்கள் கிளர்ச்சி பெரும் அளவில் நடைபெற்றது, இந்திய அரசாங்கக்கொடி மாணவர்களால் எரிக்கப்பட்டது.

கல்கத்தாவில் பரிட்சைக்காலத்தில் கல்லூரியைவிட்டு மாணவர்கள் பெருவாரியாக வெளியேறினர், கடைவீதிகளில் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

மாநிலச் சீரமைப்பின் பொழுது ஒரிசா மாநிலத்தில் மாணவர்கள் நேரடியாகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர், பம்பாயில் எதிர்ப்பு ஊர்வலங்களில் பெரும்பாலாக கலந்து கொண்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆமதபாத்தில் பண்டிதநேரு பேசவிருந்த கூட்டத்தில் குசராத் மாணவர்கள் கூச்சலிட்டனர். பண்டித நேரு சென்றால் பாரெல்லாம் பெரும் வரவேற்புகள் கிடைக்கின்றன, அவர் பேசுவதைக் கேட்க மற்ற நாட்டில் பெருங் கூட்டங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. அதே நேரு பண்டிதர் இந்தியாவின் பிரதமர், அவர் நாட்டுக்குள் ஆமாதாபாத் என்ற நகரில் பேசமுடியாதவாறு செய்யப்பட்டார், மாணவர்களால்! நேரு பெருமகனார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார், கெஞ்சிக் கேட்டார், குசராத் மாணவர்கள் கூச்சலிட்டபடி இருந்தனர், குழப்பம் விளைவித்தபடி இருந்தனர், கடைசியாகக் கூட்டத்தில் பேசமுடியாதபடி நேருபண்டிதர் திருப்பியனுப்பப்பட்டார்! அவ்வாறு வடநாட்டில் பல அமளிகள் மாணவர்களால் நடத்தப்பட்ட நேரத்தில் பேசாத கனம் சுப்பிரமணியனார் மாணவர்களைப் பற்றி கவலை காட்டுகிறார், நமக்கு உபதேசம் அருளுகிறார்.

எதிர்கட்சியிலிருக்கும் நம்மைப்பார்த்து "மாணவர்களை அரசியலுக்கு இழுக்காதீர்கள்!" என்று கூறுவதை விட, காங்கிரசுக்காரராகிய அவர் தனது கட்சித் தலைமை பீடத்துக்கு அவ்வாறு கேட்டுக்கொண்டிருக்கலாம். ஏனென்றால் காங்கிரசுக் கட்சியின் தலைமைபீடந்தான், மாணவர்களுடன் தொடர்புகொள்ள புது அமைப்புகளை உண்டாக்கவேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

மாணவர்களை அரசியலுக்கு இழுக்கவேண்டாமென்று கனம் சுப்பிரமணிய நம்மைப் பார்த்துக் கூறுகிறார். அங்கு அவருடைய கட்சித் தலைவர்கள், மாணவர்களை தம் கட்சிக்கு எப்படி யெல்லாம் இழுக்கலாம் என்று திட்டமிடுகிறார்கள்!

அரசியலிலிருந்து மாணவர்களை அப்பாற்படுத்திவிட வேண்டுமென்று கனம் சுப்பிரமணியம் போன்றவர்கள் விரும்புகிறார்கள். காங்கிரசுக் கட்சிகூட, மாணவர்களை இழுப்பதால் தன் கட்சிக்கு கிடைக்கக் கூடிய பலனை நினைத்துதான் மாணவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறதேயன்றி, அரசியலில் தொடர்பு கொள்வதால் மாணவர்களுக்கோ, அரசியலுக்கோ, நாட்டுக்கோ, என்ன பலன்கள் கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவில்லை.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்றால். உண்மையில் அன்றாட அரசியல் கட்சியின் காரியங்களில் ஒரு மாணவன் கல்லூரியிலிருந்துகொண்டு ஈடுபடுத்திக் கொள்ளமுடியாது. கல்லூரியை விட்டு வந்தால் அது ஓரளவு முடியும், ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கல்வி வளர்ச்சியைப் பாழ்படுத்தி விட்டு, அரசியலுக்குள் பணியாற்ற வருவதை என்றும் ஆதரித்ததில்லை. மாறாக கல்வி வளர்ச்சியில் அதிக அக்கரை காட்டுமாறு அடிக்கடி நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். காங்கிரசுக் கட்சி மாணவர்களைக் கல்லூரியிலிருந்து வெளியேறச் செய்திருக்கிறது. கல்வித்துறையிலிருந்து எண்ணற்ற மாணவர்களைப் பிரித்து அரசியலுக்கு அழைத்து வந்திருக்கிறது. இன்னமும் அதுபோலச் செய்யத் திட்டமிடுகிறது.

அரசியல் பணியில் மாணவர்கள் ஈடுபடக் கூடாதென்பதை நாம் வலியுறுத்திய போதிலும், அரசியலைப் பற்றி மாணவர்கள் நினைக்கவே கூடாது என்று கூறவில்லை! அரசியல் பணி கூடாது, ஆனால் அரசியல் அறிவு நிச்சயமாக மாணவர்களுக்கு வேண்டும்.

இன்றைய மாணவர்கள் நாளைய அரசியலை நிர்ணயிக்க வேண்டியவர்கள்.

இன்றைய மாணவர்கள் நாளைய அரசியலில் பங்கு பெறப் போகிறவர்கள்.

இன்றைய மாணவர்கள் நாளைய அரசியல் பொறுப்புகளை ஏற்க வேண்டியவர்கள்.

அரசியல் பொறுப்புகளை ஏற்று நடத்த வேண்டிய சமயத்தில் திடிரென்று அரசியல் அறிவு வந்துவிடாது. அரசியல் பொறுப்பு என்பது அரசாங்க நிர்வாகத்தில் பங்கு பெறுவது மட்டுமல்ல, எத்தகைய அரசாங்கம் நாட்டுக்குத் தேவை என்பதை தெரிந்திருப்பதும் முக்கியமான அரசியல் பொறுப்பு, தனிப்பட்டவனின் அரசியல் கடமையாகும். அந்தக் கடமையைச் செம்மையாகச் செய்ய வேண்டுமென்றால், அரசியல் பற்றிய கருத்துக்களை-நாட்டிலுள்ள அரசியல் பற்றிய அறிவை - மாணவர்கள் பெற வேண்டும். கல்லூரியில் கடைசிப் பரிட்சை வரை கண்மூடியாக இருந்து விட்டு. கல்லூரியை விட்டு வெளி வந்ததும் அரசியலைப் பற்றி எல்லாம் தெரிந்தவனாக முயன்றால், அது முடியாத காரியம்.

அரசியல் பணிகளில் மாணவர்கள் ஈடுபடக்கூடாது. ஆனால் அரசியல் அறிவை மாணவர்கள் பெறவேண்டும்.

அரசியல் அறிவை மாணவர்கள் பெறுவதென்பது கூடத் தேவையில்லை என்று வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். படிக்கிறவர்கள் அரசியலுக்கு அப்பாற் பட்டு இருக்கட்டும் என்று கூறுவது, படித்தவர்கள் பின்னால் அரசியலுக்கு வரவேண்டாம் என்றுதான் முடியும்.

எதிர்க்கட்சிகளைப் பார்த்து மாணவர்களை அரசியலுக்கு இழுக்காதீர்கள் என்று சொல்வது, மாணவர்களைத் தாங்கள் இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற முயற்சியில் ஒரு பகுதியாக இருக்கிறது. அத்துடன் நிர்வாகத்தின் திறமைக்குறைவால் ஏற்படுகிற குறைபாடுகளுக்கு அது ஒரு காரணமாகப் பயன்படுகிறது.

# 500 புதிய தொண்டர்கள்!

——(0)——

## காங்கிரசுக் கட்சி படை திரட்டப்போகிறது!

——(0)——

### புதிய தொண்டர்களுக்கு என்ன வேலை தரப்போகிறார்கள்?

——(0)——

**500** முழுநேரத் தொண்டர்களை அமர்த்த காங்கிரசுத் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது. அமைப்பு முறையைப் பலப்படுத்த, காங்கிரசின் செல்வாக்கைப் பாதுகாக்க "புதிய இரத்தம்" — இளைஞர்களின் எண்ணிக்கைக் காங்கிரசிற்குள் வரவேண்டுமென்று காங்கிரசுத் தலைமைப் பீடம் நினைக்கிறது.

கட்சியமைப்பைப் பலப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் காங்கிரசுக்கு அடிக்கடி வருகிறது. அதுவும் தேர்தலுக்குப்பின் கூடிய காங்கிரசுக் கமிட்டிக் கூட்டங்களில் அந்த பிரச்சினை முக்கியமானதாக விவாதிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் தோற்றுப்போன மற்றக் கட்சிகள், தமது அமைப்பைப் பலப்படுத்த வேண்டுமென்று திட்டமிடுவதில் அர்த்தமிருக்கிறது. அவைகளுக்கு அந்த அவசியமுமிருக்கிறது. ஆனால் இரண்டு மாநிலங்கள் தவிர மற்ற மாநிலங்களில் காங்கிரசு தனிப்பெரும் கட்சியாகத் தேர்தலிலிருந்து வெளிப்பட்டுள்ளது. பெரும்பான்மைக் கட்சியாக வராதுபோன இரண்டு மாநிலங்கள் கேரளமும் ஒரிசாவும். இவற்றில்கூட, ஒரிசாவில் ஏதோவொரு வகையில் "ஏற்பாடுகளைச்" செய்து காங்கிரசால் மந்திரிசபை அமைக்க முடிந்தது. மாநில சட்டசபைகளில் இருப்பதைவிட அதிகமான அளவு பலத்துடன் மத்திய சட்டசபையில்-அதாவது இந்தியப் பாராளுமன்றத்தில் காங்கிரசுக் கட்சி இருக்கிறது.

தேர்தல் கணக்கை வைத்துப் பார்த்தால், காங்கிரசு நல்ல அமைப்புள்ள, செல்வாக்குள்ள கட்சியாக இருக்கவேண்டும். தேர்தலில் அதிகமான இடங்களைப் பிடித்துக் கொண்டபோதிலும், தனது செல்வாக்கைப் பற்றிக் காங்கிரசுக் கட்சிக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான், அமைப்புமுறைகளில் திருத்தங்களைச் செய்ய முற்பட்டுள்ளது. தேர்தலுக்குப்பின் காங்கிரசு தன் அமைப்பைப் பலப்படுத்திக் கொள்ள செய்யும் முயற்சிகளைப் பார்த்தால் தேர்தலில் அது பெற்ற வெற்றிகள் கட்சியின் பலத்துக்கோ, கொள்கை பலத்துக்கோ ஏற்பட்ட வெற்றிகளல்ல. வேறு ஏதோ ஒரு பலத்தினால் ஏற்பட்ட வெற்றிகள். பணம் தந்த பலமாயிருக்கலாம், பதவிகள் தந்த பலமாயிருக்கலாம், அதிகாரம் தந்த பலமாயிருக்கலாம், எந்தவகையில்கிடைத்த பலமாயிருந்தாலும், கொள்கை பலமோ, கட்சிபலமோ தேர்தலில் போதவில்லை என்பது தெரிகிறது. அதனால் தான், தேர்தல் முடிந்ததும் கட்சி பலத்தைப் பற்றியும் கொள்கை பலத்தைப் பற்றியும் காங்கிரசுத்தலைவர்களுக்கு அக்கறை பிறந்துள்ளது. மாணவர்களை, இளைஞர்களை அழைக்க புது அமைப்புகளை உண்டாக்குகிறார்கள், முழுநேரத் தொண்டர்களைப் போடுகிறார்கள்.

500 முழுநேரத் தொண்டர்களை அமர்த்தக் காங்கிரசுக் கட்சி திட்டமிட்டிருக்கிறதேயன்றி, அந்தத் தொண்டர்களுக்கு என்ன வேலை தருவது என்று அது முடிவு செய்ததாகத் தெரியவில்லை. கட்சியைப் பலப்படுத்த என்று பொதுப்படையாகக் கூறிய போதிலும், எந்தவகையில் கட்சியைப் பலப்படுத்தவேண்டும் என்பது குறித்து காங்கிரசுத் தலைவர்களுக்குத் தெளிவான கருத்து கிடையாது.

கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதா? அல்லது ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்வதா?

பிரசாரம் செய்யவேண்டுமென்றால் எதைப்பற்றிப் பிரசாரம் செய்யவேண்டும்? ஐந்தாண்டுத் திட்டத்தின் அருமை பெருமைகளைப்பற்றி, காங்கிரசாட்சியால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப்பற்றி, பண்டிதநேருவின் அயல் நாட்டுக் கொள்கைகளைப்பற்றி!

இவைகளைப்பற்றிப் பிரசாரம் செய்யத் தனியாக இனிமேல் ஆட்கள் தேவையில்லை. ஏனென்றால், எந்த அளவு பிரசாரம் செய்யமுடியுமோ அந்த அளவுக்குப் பிரசாரம் நடைபெறுகிறது.

இந்தியாவிலுள்ள பத்திரிக்கை பலத்தில் 100க்கு 80 அல்லது 90 பங்கு காங்கிரசின் சார்பாக இருக்கிறது. காங்கிரசும், காங்கிரசு அரசாங்கமும் தரும் செய்திகளை பக்குவமாக வெளியிட அவை காத்துக்கொண்டிருக்கின்றன.

காங்கிரசு அரசாங்கத்தின் சாதனைகளைக்காட்ட, நேருவின் பேச்சுக்களைக்காட்ட, சினிமாப் பகுதி இருக்கவே இருச்கிறது. இந்தியாவில் மொத்தம் 3250 சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. அந்த 3250 கொட்டகைகளிலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காட்சியிலும் ஏதாவது ஒருபடம்-காங்கிரசு அரசாங்கத்தைப் புகழ்ந்து, நேரு படத்தைக்காட்டி, பாரதத்தின் பெருமைகளைச் சொல்லியபடிதான் இருக்கும். நாள்தோறும் நடைபெறும் இரண்டு அல்லது மூன்று காட்சிகளுக்கும் சேர்த்து ஒவ்வொரு கொட்டகைக்கும் சராசரியாக 500 அல்லது 600 பேர்கள் போவதாக வைத்துக் கொண்டாலும், ஒவ்வொரு நாளும் சுமார் 15 லட்சம் அல்லது 20 லட்சம் மக்கள் காங்கிரசு பிரசாரத்தைச் சினிமா படத்தின்மூலம் கேட்டபடி இருக்கிறார்கள்.

பத்திரிக்கைகளை மிஞ்சுமளவிற்கு, படக்காட்சிகளை மிஞ்சுமளவுக்கு, ரேடியோவை மிஞ்சுமளவுக்கு புதிய தொண்டர்கள் என்ன பிரசாரம் செய்யப்போகிறார்கள்.

காங்கிரசுக்கட்சி மேடையில் பேசுவதை காங்கிரசு அரசாங்க ஆதரவிலும் பேசுகிறார்கள். காங்கிரசு மேடைக்கு என்று தனியாக ஒரு பேச்சு இல்லை. அரசாங்க ஆதரவில நடைபெறும் பிரசாரமெல்லாம் காங்கிரசுக்கட்சிக்கு ஆதரவாகவே இருக்கின்றன.

பிரசார பலம் காங்கிரசுக்கு ஏராளமாக இருக்கிறது.

பத்திரிக்கைபலம் காங்கிரசுக்கு இருக்கிறது. அங்கத்தினர்கள் எண்ணிக்கை பலமும் காங்கிரசுக்கு இருக்கிறது.

இருந்தாலும் காங்கிரசைப் பலப்படுத்த 500 முழுநேரத் தொண்டர்கள் தேவை என்று காங்கிரசுத் தலைமைப்பீடம் திட்டமிடுகிறது. இதுவரை இல்லாத எந்தப் புது பலத்தை இவர்கள் கொண்டுவந்து சேர்க்கப்போகிறார்கள்!

காங்கிரசுகட்சிக்கு வேண்டிய பிரசாரத்தைக் காங்கிரசு அரசாங்கம் செய்துவிடுகிறது. அதை விட்டுக் கட்சிக்குத் தனிப் பிரசாரம் தேவையில்லாமற் போய்விடடது. அவ்வாறு தேவை ஏற்படாததற்குக் காரணம், தனியாகக் கட்சி மேடையமைத்தாலும் அரசாங்கம் செய்கிற பிரசாரத்தைத் தான் அங்கும் செய்யவேண்டியிருக்கிறது.

ஒரே ஒரு சமயத்தில் மட்டும் தான் கட்சிப்பிரசாரம் தனிப்படையாகச் செய்யவேண்டிய அவசியம் காங்கிரசுக்கு ஏற்பட்டது. அதுதான்தேர்தல்காலம் பொதுப்படையாகக் காங்கிரசின் "செல்வாக்கு" பரவியிருந்தபோதிலும், இன்னினாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கூறுவதற்காவது பிரசார இலாகாத் தனியாகத் தேவைப்பட்டது. அந்தப் பிரசார இலாகாவை ஏற்படுத்த காங்கிரஸ் தலைமைப்பீடம் இப்பொழுதிருந்து செலவு செய்ய முன்வந்துள்ளது. தேர்தலில் ஏற்பட்ட சங்கடத்தால்தான், தேர்தலுக்குப்பின் அந்தக் கவனம் ஏற்பட்டுள்ளது. தேர்தல் காலம் தவிர மற்ற சமயங்களில், அரசாங்கத்துடன் மாறுபட்டாலன்றி காங்கிரசால் தனியாகப் பிரசாரம் செய்யவேண்டிய அவசியமில்லாதிருக்கிறது.

எல்லாவகைகளிலும் காங்கிரசுக்குப் பலமிருந்தும், "காங்கிரசைப் பலப்படுத்த வேண்டும்!" என்று தலைமைப் பீடம் கவலைப்படுகிறது. அதற்கு ஏற்பட்டுள்ள குறை கொள்கை பலம், கொள்கைப் பற்று குறைந்ததுதான். கொள்கைப் பலவீனத்தைப் போக்க, "புதிய இரத்தமோ" "புதிதாக 500 தொண்டர்களோ" வந்தால் போதாது. கொள்கைப் பலவீனம் இருக்கும் பொழுது வேறு பலங்கள் வளர்ந்து பயனில்லை, இருதய பலவீனமானவனுக்கு உடல் பருத்துவிடுவதால் ஆபத்தேயொழிய, நல்லதல்ல!

"இந்த உரிமைச்சாசனம் முற்றிலும் உருப்பெற்று ஆட்சிக்கு அடிப்படையாக அமையப்போவதை பார்க்கும் வாய்ப்பு இல்லாமல் நாம் இறந்துபோகலாம். இறப்பு எல்வேருக்கும்தான். போராடுபவர்கள் இறந்து விடுவார்கள், அடிமைகள் இறந்துவிடுவார்கள். தூக்குமேடையில் இறக்க நேரிடலாம், துன்பங்களில் மத்தியில் தாழ்ந்துபோய் இறக்கநேரிடலாம். இறப்பு எந்தச் சமயத்தில் என்னை அழைத்தாலும், செய்யவேண்டிய தியாகம் எத்தகையதாயிருந்தாலும், அதற்கு நான் தயாராகக் காத்திருக்கிறேன். ஆனால் நான் உயிருடன் இருக்கும்வரை, எனக்கொரு தாயகத்தைத் தாருங்கள். இப்பொழுதில்லாவிட்டாலும் தாயகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையையாவது தாருங்கள். அந்தத் தாயகம் விடுதலைபெற்ற தாயகமாக இருக்கவேண்டும்.

—அமெரிக்க உரிமைப் போரில் டேனியல் வெப்சடர்.

இலக்கியம்

# விழவுக்களம் வந்த விறலி!

**இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.**

தன் ஆருயிர்த் தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து பரத்தை ஒருத்தியை நாடிச் சென்று, அவளோடு சேர்ந்து பரத்தையர் சேரியில் வாழ்கிருன் என்பதைக் கேள்வியுற்ற தலைவி மிகவும் மனங்கலங்கி வருந்துகிருள்.

தலைவி ஓயாமல் புலம்பி அழுதுகொண்டே யிருக்கிருள். நல்ல ஆடைகளோ, அணிகலங்களோ அணிந்துகொள்ளாமல், இல்லத்தின் ஓர்மூலையில் உட்கார்ந்துகொண்டு, தலைவன் முதன்முதலாகத் தன்னைக் கண்டதையும், அவன் காதல் எண்ணத்தைத் தெரிவித்ததையும், தான் முதலில் அவனிடம் காதல் கொள்ள மறுத்ததையும், அவன் மேலும்மேலும் வந்து தன்னை வற்புறுத்தியதையும், வேறு வழியில்லாமல் அவனிடம் இரக்கங்காட்டி அவனைக் காதலிக்கவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டதையும், இருவரும் காதலர்களாகிக் களவொழுக்கம் நடத்தியதையும், களவொழுக்ககாலத்தில் பகற்குறி, இரவுக்குறி இடங்களுக்கு ஒளிந்து, மறைந்து, அஞ்சி, நடுங்கிச்சென்று வந்ததையும், தலைவனோடு சேர்ந்து மானோடும், மயிலோடும் சோலையில் விளையாடியதையும் அருவிப் புனலிலே சென்று ஆடியதையும், கட்டியணைத்து முத்தமழை பெய்து மகிழ்ந்து இருந்ததையும், தான் காதலிக்கும் தலைவனையே தான் மணம் செய்துகொள்ள விரும்பியிருப்பதாகத் தோழிமூலம் தாய்தந்தையர்க்கு அறிவித்ததையும், தாய் தந்தையர் முதலில் எதிர்த்துப் பின்னர் திருமணத்திற்கு இசைந்ததையும், திருமணத்திற்குப்பிறகு தனி இல்லம் புகுந்ததையும், இல்லற வாழ்வை இனிது நடத்திவந்தமையையும், தலைவன் காதல் கனிவு, அன்பு அருள், ஈவு இரக்கம் ஆகியவை காட்டித் தன்னைப் போற்றி வளர்த்து வந்ததையும் எண்ணிஎண்ணிக் கதறியழுகிருள்.

தோழி எவ்வளவோ தேற்றியும்கூடத் தலைவி தன் அழுகையையும், வருத்தத்தையும் நிறுத்தியபாடில்லை. தலைவி துரும்பாக இளைத்துப், பொலிவெல்லாம் இழந்து, வேதனையே உருவெடுத்து வந்தாற்போல் காட்சியளித்து இருக்கிருள்.

தலைவனிடமிருந்த வனப்பையும்' வளத்தையும் மெல்ல மெல்ல கறந்துகொண்டதற்குப்பிறகு, பரத்தையானவள் அவனைப் பொருட்படுத்த மறுக்கிருள். தலைவன் கைப்பொருள் முழுவதும் இழந்து, மேற்கொண்டு மதிப்புடன் வாழ என்னசெய்வதென்று தோன்ருமல், பரத்தை வீட்டைவிட்டு வெளியேறி எங்குப் போய்த்தங்குவது என்று தெரியாமல், பரத்தைக்குக் குற்றேவல் புரிந்துகொண்டு வாழ்கிருன். அன்புக்குறிய அழகிய மனைவியை விட்டுவந்து அல்லற்படுகிருேமே என்று எண்ணி எண்ணி வெட்கமும், துயரமும் அடைகிருன்,

தலைவனைப் பரத்தையிடம் கொண்டுபோய்ச் சேர்க்கத் தூதாக விளங்கினவள் ஆடல் பாடலிலே வல்லவளான ஒரு விறலியாவாள். தலைவன் மீண்டும் அவளை அழைத்து, எப்படியேனும் தன்னைக் கொண்டுபோய்த் தன்னுடைய இல்லத்தில் சேர்ப்பிக்கவேண்டும் என்றும், தலைவி, தன்னிடம் கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னிடம் இரக்கங் காட்டித் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி செய்யத் துணைபுரிய வேண்டும் என்றும் கூறி அவளை வேண்டிக் கேட்டுக் கொள்கிருன். விறலி தன்னுலான உதவியைச் செய்வதாகத் தலைவனிடம் வாக்களித்துச் செல்கிருள்.

ஊரில் திருவிழா கொண்டாடப் படுகிறது. திருவிழாவில் கலந்துகொள்ள எல்லோரும் புறப்பட்டுப் போகிருர்கள். விறலியும் தன் கூந்தலுக்கு மயிர்ச்சாந்து தடவி வாரி முடித்துக்கொண்டு, தன்னைப் பலவகைகளிலும் அழகு படுத்திக்கொண்டு திருவிழாக் களத்திற்கு வருகிருள். தலைவிக்குச் சூழ்நிலை வேறு பாட்டின் காரணமாகச் சற்று ஆறுதல் ஏற்படட்டும் என்று கருதி தோழியும், உற்ருர் உறவினரும் தலைவியுடன் கூடிக்கொண்டு திருவிழாவிற்குச் செல்லுகிருர்கள். காண்போரின் கண்ணைக் கவருமாறு கரிய கூந்தலையும், பருத்த தோள்களையும், வெள்ளிய ஒழுங்காக விளங்கும் பற்களையும். திரண்டு நெருங்கிய துடைகளையும், மடப்பான பார்வையையும்உடையவளாய்த்திருவிழாக்களம்பொலிவுபெறுமாறு விறலி அங்கு மிங்கும் சுற்றி வருகிருள். தலைவி தன் தோழியோடு ஒரு மரத்தின் நிழலில் நின்றுகொண்டிருப்பதை விறலி கண்டு பிடித்துக் கொண்டு மெல்ல அவர்களை நோக்கி நகருகிருள், தங்களை நோக்கி யாரோ ஒருத்தி வருகிருள் என்று எண்ணிப், புன்முறுவல் காட்டி அவளை வரவேற்கிருர்கள்.

விறலி தலைவியை உற்று நோக்கி "ஏன் இப்படி இளைத்திருக்கிறீர்கள்? உடம்புக்கு என்ன?" என்று விளுவுகிருள்.

"உடம்புக்கு ஒன்று மில்லை! எண்ணெய் தேய்த்து முழுகினேன். அதனுல் தான் தலைமயிரை வாரிக்கொள்ளாமல், நல்ல ஆடை அணிகள் கொள்ளாமல் இருக்கிறேன். வேருென்று மில்லை!" என்று தன் நிலைமையை மறைத்துக் கூறுகிருள் தலைவி.

தோழி விறலியைப் பார்த்து, "நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று வினவுகிருள்.

"நான் இந்த ஊரைச் சேர்ந்தவள் தான். சாதாரணமாக உங்களைப் பார்த்தேன் கண்டு பேசி விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்கிருள்.

விறலி தலைவிக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும் என்று கருதி அவனைப் பல படப் பாராட்டிக் கூறுகிருள். தலைவி அவற்றையெல்லாம் அக மகிழ்வோடு கேட்டுக்கொண்டிருக்கிருள்.

பிறகு மெல்ல "தலைவரும் உன்னிடத்தில் மிக்க அன்புடையவராகத்தான் காணப்படுகிருர்!" என்று விறலி கூறுகிருள்

"தலைவரை உனக்கு எப்படித் தெரியும்?" என்று தோழி வினவுகிருள்.

"அவரைச் சாதாரணமாகப் பார்த்திருக்கிறேன்; அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்!" என்கிருள் விறலி "அவர் மிக்க அறிவும் ஆற்றலும் படைத்தவர் என்றும் அவருக்கு ஊரிலே நல்ல மதிப்பு உண்டு என்றும ஊரரெல்லாம் பேசிக் கொள்கிருர்கள்" என்று விறலி கூறுகிருள்

அதற்குத் தோழி வேறு எதும் சொல்லுவதற்கு வழியின்றியும், தலைவனைக் குறைத்துச் சொல்லுவதற்கு விருப்பமின்றியும் "ஆமாம்! அவர் எல்லோரிடமும் அன்புடன் பழகுவார்; அதனுல் எல்லோரும் அவரிடம் மதிப்பு வைத்திருக்கிருர்கள்!" என்று கூறுகிருள்.

தலைவியும், தோழியும் தலைவனிடம் சினங்கொண்டிருக்கவில்லை என்று கருதிக்கொண்டு இனி அவர்களிடம் தலைவனைப் பற்றித் தாராளமாகப் பேசலாம் என்று எண்ணிக் கொண்டு, "தலைவர் உங்களைப் பார்க்க விரைவில் வர இருக்கிருர்!" என்று கூறுகிருள் விறலி.

அது கேட்ட தலைவி திடுக்கிட்டுப் போகிருள். தோழி விறலியைப் பார்த்து "தலைவரா? அவர் எங்களிடம் வரப் போகிருர் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்கிருள்.

"அவரைக் கண்டு விட்டு தானே வருகிறேன்!" என்கிருள் விறலி.

"எங்கே அவரைக் கண்டாய்?" என்று வினவுகிருள் தோழி.

"பரத்தை வீட்டில் அவரைப் பார்த்தேன்!" என்கிருள் விறலி.

"பரத்தை வீட்டிலா? அங்கு என்ன செய்து கொண்டிருக்கிருர்?" என்று கேட்டாள் தோழி.

"பரத்தைக்கு குற்றேவல் புரிந்துகொண்டிருக்கிருர்!"

"ஏன்?"

"கைப்பொருள் முழுவதும் இழந்துவிட்டார்; வேறு வழியின்றி பரத்தையிடம் குற்றேவல் புரிந்து வாழ்கிருர்!"

"நீ பரத்தை வீட்டிற்கு எக் காரணம் பற்றிச் சென்ருய்?"

"பரத்தையர் எல்லோரையும் எனக்குத் தெரியும். அவர்கள் வீட்டிற்கு அடிக்கடிப் போய்வரும் பழக்கம் உண்டு!"

"அப்படியானுல் உனக்கு என்ன தொழில்?"

"நான் ஆடல் பாடல் புரியும் ஒரு விறலி!" என்று பெருமிதம் தோன்றக் கூறினுள். இவள்தான் பரத்தை வீட்டிற்கு அழைத்துச் சென்றிருப்பாளோ என்று தோழி ஐயப்பட்டுக்கொண்டு "தலைவரை உனக்கு நீண்ட நாட்களாகத் தெரியுமா?" என்று வினவு கிருள்,

"தெரியும்'" என்கிருள் விறலி.

(9-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# தியாகம்

(முல்லைவழுதி)

**அ**றுவடை செய்யப்பட்ட நெல்லை அளந்து குவித்துவிட்டு, துண்டை உதறித் தோள்மீது போட்டுக்கொண்டு, உதட்டில் புன்னகை தவழ அருகிலிருந்த குளத்தில் குளிப்பதற்குச் சென்றான் முத்து. குவித்திருந்த நெல்லை ஒருமுறை திரும்பிப் பார்த்தான். எவ்வளவு பெரிய குவியல்! பண்ணையாருக்குக் கொடுக்கவேண்டிய பகுதி நெல் போனாலும், பட்ட கஷ்டத்திற்குப் பலனிருக்கிறதே!

"முத்து அண்ணனைப்போல வருமா? எவ்வளவு தயாளகுணம்! ஏழையின் கஷ்டம் ஏழைக்குத்தான் தெரியும் என்று சும்மாவா சொன்னார்கள்! முத்து அண்ணன் பதினாறும் பெத்துப் பெருவாழ்வு வாழணும்!" – நெல்லறுக்க வயலுக்கு வந்திருந்த பெண்கள், கொடுக்க வேண்டியதற்கும் அதிகமாகக் கூலிபோட்டு அனுப்பியதற்காக முத்துவை இப்படி வாழ்த்திக்கொண்டு சென்றார்கள்.

"அண்ணே! வள்ளியண்ணியை இந்த வருஷமும் ஏமாத்திடலாமின்னு பார்கிறயா? அது தான் முடியாது!" என்று ஒரு துடுக்குக்காரப் பெண் வள்ளியைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தாள். எல்லோரும் கலகலவென்று நகைத்தனர். "சரிதான், வாயை மூடிக்கொண்டு நடங்கடி!" என்று அவர்கள் மீது பொய்க் கோபத்தைக் காட்டினாள் வள்ளி.

தன் தோழிகளுடன் வயல் வெளியைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்த கயல் விழி வள்ளியை, இமை கொட்டாமல் செயலற்று பார்த்துக்கொண்டிருந்தான் முத்து. பண்ணையார் பொன்னம்பலத்தின் குரல் கேட்டுப் பார்வையைத் திருப்பினான். "சீக்கிரம் குளித்துவிட்டு வா முத்து! உன்னுடன் சில முக்கியமான சங்கதிகள் பேச வேண்டும்!" என்றார் பண்ணையார். முத்து குளத்திலிறங்கினான்.

"பண்ணையார் எதைப்பற்றிப் பேசப் போகிறார்? வள்ளிக்கும் எனக்கும் நடைபெற வேண்டிய திருமணத்தைப்பற்றித்தான்! 'ஆறுவடை முடிந்ததும், நம்ம முத்துவுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டியது தான்!' என்று எல்லோரிடமும் அவரே சொல்லிக்கொண்டிருக்கிறாரே! என் மீது தான் அவருக்கு எவ்வளவு அன்பு!..." இப்படி இனிய நினைப்புகளுடன், குளிர்ந்த நீரில் குளித்து விட்டுக் கரையேறினான் முத்து.

நெற்குவியலைப் பார்த்த வண்ணம் சுமை தாங்கியின் மீது பண்ணையார் பொன்னம்பலம் அமர்ந்திருந்தார். முத்து அவரருகில் சென்று அடக்கத்துடன் நின்றான். "வந்தாயா முத்து! இந்த முறை நீ வள்ளியை ஏமாற்றி விட முடியாது!" என்று கூறிப் புன்னகை புரிந்தார் பண்ணையார். அவனா ஏமாற்றினான்? திருமணத்திற்கு வேண்டிய செலவுக்கு அவர் பணம் கொடுத்திருந்தால், வள்ளி எப்போதோ முத்துவின் வாழ்க்கைத்-துணைவியாகியிருப்பாளே!... பண்ணையாரின் வெல்லப் பேச்சு, முத்துவின் நினைப்பில் இனிப்பை யூட்டியது! தலை குனிந்த வண்ணம் அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனது காற் பெருவிரல் ஓவியத்திற்கு உதவாத கோடுகளை வரைந்து கொண்டிருந்தது. அவனது சிந்தனையில் வள்ளியின் ஓவியம் எழிலுருவாக அமைந்திருந்தது.

"இந்த மாதத்திலேயே முடித்து விட வேண்டும் முத்து காலையில்கூட வள்ளியின் தகப்பன் இதுபற்றி என்னிடம் சொல்லிவிட்டுப் போனான்."

"உங்க விருப்பப்படி செய்யுங்க. வள்ளிக்கு யாரோ தூரத்து உறவில்..."

"முறைப்பையன் ஒருவன் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இருந்து போகட்டுமே! நமக்கென்ன?"

"எதற்கும். அவனையும் கண்டு ஒருவார்த்தை கேட்டுவிட்டா..."

"அதுவும் சரிதான். ஆனால் வள்ளி உன்னைத்தவிர வேறு யாரையும் மணக்க முடியாதென்று அம்மாவிடம்-பண்ணையார் மனைவி–சொன்னாளாமே! அவன் வந்து தடுத்துத்தானா திருமணம் நின்றுவிடப் போகிறது?"

முத்துவின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"ஏன் அத்தான் இப்படிப் பித்துக்குளித்தனமா பேசறே? கிணற்றுத் தண்ணீரை வெள்ளம்கொண்டு போவதுண்டா? உன்னைத் தவிர வேறொருவன் என்கையைத் தொடவந்தா, இந்தக்கொடுவாள் அவனுக்குப் பதில் சொல்லும்!" அன்றொருநாள் புளியந்தோப்பில் வள்ளி சொன்ன வார்த்தை, முத்துவின் நினைவுக்கு வந்தது. அவனது நெஞ்சில் தென்றல் தவழ்ந்தது!

"முத்து!"

பண்ணையாரின் முகம் நோக்கினான் முத்து.

"உன்னிடம் நான் ஒரு உதவியை எதிர்பார்க்கிறேன். செய்வாயா?!' பண்ணையார் முகத்தில் கெஞ்சும்பாவனை தெரிந்தது.

முத்து வியப்பால் வாய்பிளந்தான். "என்னிடம் பண்ணையாருக்கு உதவியா? நானல்லவா அவருதவியை நாடி நிற்கிறேன்! அவருக்கு நான் என்ன உதவி செய்யமுடியும்!" என்றெண்ணி, பண்ணையார் முகத்தையே இமைக்காமல் பார்த்தான்.

"ஆம்முத்து! உண்மையாகத்தான் சொல்கிறேன்! உன் உதவி எனக்கு வேண்டும்!"

"உதவி என்னங்க? கட்டளையிட்டால் எதையும் செய்யக் காத்திருக்கிறேன்!"

"எனக்குத்தெரியும் முத்து, கந்தனைப்போல நீ நன்றிகெட்டவனில்லையென்று!"

தன்னை உயர்த்திக் கூறும் நேரத்தில் கந்தனைத் தாழ்த்திப் பேசவேண்டிய அவசியம் என்னவென்று முத்து சிந்திக்கவில்லை. பெரியவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்பது எண்ணம்.

கந்தன் ஊரிலே 'ரௌடி' என்று பெயரெடுத்துவிட்டான். தன்னைப் பிறர் மதிக்க வேண்டும் என்று விரும்பும் பெரிய மனிதர்கள் தெருத் திண்ணையிலமர்ந்து வம்பளந்து கொண்டிருக்கும் நேரத்தில், காலிறங்க வேட்டியுடுத்து, முழுக்கமுழுக்கத் தலையை வாரிக்கொண்டு நிமிர்ந்து நடந்து செல்வான் கந்தன். "மட்டுமரியாதை தெரியாதவன்! காலிப்பயல்!" முணுமுணுப்பு அவன் காதில் விழும் அலட்சியமாகப் போய்விடுவான். மீண்டும் அவ்வழியே அவன் வருமபோது, அவன் வாயிலிருந்து பீடிப்புகை 'குப் குப்' பென்று வெளிவரும்!" இதெல்லாம் நல்லதல்ல கந்தா! பெரியவர்களை மதிக்கவேண்டாமா? மனம்போல நடப்பது அழகல்ல!" என்று கந்தனிடம் முத்து எப்போதாவது கூறுவதுண்டு. "அவர்களிடம் நல்ல பெயரெடுக்க என்னால் முடியாதுமுத்தண்ணா! ஏதாவது உளறிக்கொண்டு போகட்டுமே, எனக்கென்ன? உன்னைப்போன்ற ஒரு சிலராவது என்னைத் தெரிந்துகொண்டால் எனக்கு அதுவே போதும்" என்பான் கந்தன்.

கந்தன் முரட்டு சுபாவமுள்ளவன். தனக்குத் தோன்றியதைச் செய்து முடிப்பான். அவனை இகழ்ந்து பேசியவர்கள் அவனிடம் தண்டனை பெற்றிருக்கிறார்கள். குறைந்த பட்சம் அவனது தண்டனை "இரவு வயலில் நெல் களவு" என்ற அளவாவது இருக்கும். களவிட்ட நெல்லில் ஒரு மணியும் தனது உபயோகத்திற்காக வைத்துக்கொள்ள மாட்டான்; ஒவ்வொரு ஏழை வீட்டின் வாயிற் படியிலும் சமபகுதியாகக் குவித்து வைத்திருப்பான். இப்படிச் செய்தவன் கந்தன் தான் என்று கொள்ளை கொடுத்தவர்களுக்குத் தெரியும்.; ஆனால் கையும் களவுமாக அவனைப் பிடிக்க முடிந்தால் தானே?

ஊரில் பெரிய மனிதர்கள் நல்லவனுக்கு முத்துவையும் தீயவனுக்குக் கந்தனையும் உதாரணமாகக் கூறுவார்கள். அந்த வகையில் பண்ணையார் பொன்னம்பலம் இப்போது கந்தனைத் தாழ்த்திப் பேசியதை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை முத்து. மேற்கொண்டு என்ன சொல்லப் போகிறார் என்று கவனித்தான். அவர் பேச்சு கந்தனைப் பற்றியதாகவே இருந்தது!

"கந்தனுக்குக் கூட வள்ளியின் மீது 'ஒருகண்' என்று கேள்விப்பட்டேன்!" பண்ணையாரின் வார்த்தை, வெடிகுண்டு வெடித்தாற்போலிருந்தது முத்துவுக்கு.

"என்ன சொல்கிறீர்கள்" என்று குழறியபடி கேட்டான். "உண்மைதான் முத்து! சில தினங்களாக இந்த விஷயம் என் காதில் விழுகிறது!" என்றார் பண்ணையார். முத்துவால் இதை நம்ப முடியவில்லை. இப்படி வேறு யாராவது சொல்லியிருந்தால் சொன்னவர்களை பரிகசித்திருப்பான். ஆனால் பண்ணையாரே சொல்லும்போது?-

"அது மட்டுமல்ல முத்து; அவன் வள்ளியை மணக்க யார் குறுக்கே நின்றாலும் தன் கைவரிசையைக் காட்டியே தீர்வதாகச் சபதமிட்டுருக்கிறான்!"

"வியப்பாக இருக்கிறது!"

"எனக்குக் கூட முதலில் இது வேடிக்கையாக இருந்தது. நான்தான் சொல்பவர் பேச்சைக் கேட்காதவனாயிற்றே! நானாகவே அவன் அப்படிப் பேசுவதைக் கேட்கும் வரை நம்பாமல்தான் இருந்தேன்."

"உண்மையாகவா?"

"பொய்சொல்லி எனக்கு என்ன ஆகவேண்டும்?"

முத்துவின் முகம் சினத்தால் சிவந்தது. உணர்ச்சியால் அவன் உடல் பற்றியது.

"கவலைப்படாதே முத்து! கந்தனென்ன யார் வந்தாலும் உன் கல்யாணத்தை நிறுத்த முடியாது-நானிருக்கிற வரையில்!"

நன்றி கலந்த பார்வையை முத்து பண்ணையார் மீது செலுத்தினான்.

கந்தனைப் பற்றிக் கூறியதும் முத்து பயந்துவிட்டான் என்று பண்ணையார் எண்ணினார் சோகம் ததும்பும் முத்துவின் முகம் அவர் எண்ணத்தை வலுப்படுத்தியது. அவர் மேலும் பேசினார்:

"நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமென்று முத

லில் கூறினேனே அது என்ன தெரியுமா முத்து?''

"தெரியாதே''

"உன்போன்ற நல்லவர்களுக்கு கந்தனை, உருத்தெரியாமல் தொலைக்கவேண்டும்! இதுவே நீ எனக்குச் செய்ய வேண்டிய உபகாரம். அவனிருக்கும் வரையில் உனக்குத் தொல்லைதான்! நல்லவனான உன் வாழ்வு பாழ்படுவதை எப்படி நான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? விரைவில் காரியம் முடியவேண்டும் முத்து!

"கந்தனைத் தொலைப்பதா?''

"பார்த்தாயா? எவ்வளவு ஈர நெஞ்சம் உனக்கு! பொல்லாங்கு செய்பவனிடமும் பரிவு காட்டுகின்றாய். பாம்புக்கும் பால் ஊற்ற நினைக்கிறாய் முத்து! உனது நலனுக்காகக் கூறுகிறேன்—கடிக்க வரும் பாம்பைக் கொல்வது பாபமல்ல!'' என்று கூறியவண்ணம் எழுந்தார். "பார்த்துக்கொள் முத்து! 'நான் வீட்டிற்குப் போய் வந்துவிடுகிறேன்; பிறகு நீ போகலாம்!'' என்று புறபபட்டார்.

பண்ணையார் பொன்னம்பலம் கூறிய வார்த்தைகள் முத்துவைக் குழப்பமுறச் செய்தனவே யல்லாமல், அச்சமடையச் செய்யவில்லை. வளமான உடலும் அன்பு நிறைந்த நெஞ்சமும் கொண்ட முத்து, நீதியைத்தவிர வேறெதற்கும் இதுவரை அஞ்சியதே கிடையாது. வள்ளிமீது முத்து கொண்டிருக்கும் காதல் கந்தனுக்கு நன்றாகத் தெரியும். விரைவில் வள்ளிக்கும் முத்துவுக்கும் திருமணம் நடக்க இருக்கிறது என்பதையும் கந்தன் அறிவான். "என்ன முத்தண்ணா! உனக்காக வயது வந்த பெண்ணை எவ்வளவு நாட்கள் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பார்கள்? எனக்கு அறிவுரை கூறத் தெரிகிற உனக்கு இது ஏன் தெரியவில்லை?'' என்று ஒருநாள் கந்தனே முத்துவிடம் கூறினான், "காலம் வந்தால் எதுவும் தன்னால் நடக்கும்!'' என்றான் முத்து. "காலம் வந்துகொண்டேதான் இருக்கிறது; வருகிற காலம் உனக்காகக் காத்திருக்காமல் போய்க்கொண்டே இருக்கிறது! அந்தி மயங்கும் நேரத்திலே புளியந்தோப்பில் அடிக்கடி நீ வள்ளியண்ணியைச் சந்திப்பது உனக்கு விளையாட்டாக இருக்கும். உனக்கென்ன, நீ ஆண்பிள்ளை. அவச்சொல் வள்ளியண்ணிக்குத்தானே? அது மானமுள்ள பொண்ணு. ஊரார் எது சொன்னாலும் காதைச் செவிடாக்கிக்கொண்டுவிடாது தெரியுமா! உனக்குப் பணம்தானே வேண்டும்?—பண்ணையார் பொன்னம்பலத்தை நம்பி இலவுகாத்த கிளியாகாதே! அவர் குணம் உனக்குத் தெரியாது!—நான் தருகிறேன் பணம்.—என்ன சொல்கிறாய்?'' என்றான் கந்தன்.

"உன்னிடம் ஏது கந்தா பணம்?''

"யார் வீட்டிலாவது கன்னம் வைத்துக்கொண்டு வருவேனென்று நினைக்கிறாயா முத்தண்ணா! பயப்படாதே! எனக்கிருக்கும் காணி நிலத்தை விற்று உன் கலியாணத்திற்குப் பணம் தரப்போகிறேன்!''

இப்படியெல்லாம் கூறிய கந்தன், வள்ளியை மணக்கவிழைகிறான்—இப்போது என்பதை நம்பவும் முத்துவால் முடியவில்லை; பண்ணையார் பொன்னம்பலமே கூறியபிறகு நம்பாமலும் இருக்கமுடியவில்லை.

வீடு செல்லாமல் வள்ளி தனக்காக வழியில் காத்திருப்பாள் என்ற நினைப்பு முத்துவுக்கு திடீரென்று தோன்றியது! பண்ணையார் வரும்வரை நெல்லுக்குக் காவலிருப்பதா, உடனே சென்று வள்ளியைச் சந்தித்துவிட்டு வருவதா என்று சிறிது நேரம் குழம்பினான். அவன் மனக்கண்முன் வள்ளியின் எழில் வதனம் குறுநகை புரிந்தது!

* * *

"என்ன முத்தண்ணா'' வள்ளியைக் காணப்போகிறாயா? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி நடக்கும்?''—எதிரில் வந்த கந்தன் சிரித்துக்கொண்டே முத்துவைப் பார்த்துக் கேட்டான். கந்தனைப் பார்த்ததுமே முத்துவுக்குக் கோபம் கோபமாக வந்தது. "அதைக் கேட்க நீ யாரடா?'' என்று குரல்வளைவரை வந்த வார்த்தைகளை மென்று விழுங்கினான் முத்து; ஒன்றும் பேசாமல் கந்தனை ஒதுங்கிச் சென்றான். "சீக்கிரம் போ அண்ணே! எவ்வளவு நேரம் உனக்காகக் காத்திருக்கும்?'' என்று பரிகசித்த கந்தனைக் கன்னத்திலறையலாம் போல் இருந்தது முத்துவுக்கு. எப்படியோ பொறுத்துக்கொண்டான்; மனக்குமுறலை அடக்கிக்கொண்டான்.

எவ்வளவோ பேசவேண்டும் வள்ளியுடன் என்று ஆவலுடன் புளியந் தோப்பினுள் நுழைந்த முத்து. அங்கே வள்ளியைக் காணாமையால் பெருத்த ஏமாற்ற மடைந்தான். பெரும் சுமையைத் தூக்கிக்கொண்டு பத்து மைல் நடந்து வந்தவனைப்போல் அலுப்புடன் தரையிலமர்ந்தான். வள்ளியின்மீது அவனுக்குக் கோபம்கூட வந்தது. 'களத்து நெல்லையும் விட்டுவிட்டு விரைந்து வந்தேனே! அதற்குள் போய்விட்டாளே! என்ன அலட்சிய சுபாவம்! என்மீது உண்மையான அன்பு இருந்தால், எனக்காகக் காத்திருப்பாளே!'' என்றது முத்துவின் வெளிமனம். "ஏன் வள்ளியின்மீது கோபமடைகிறாய்? இருட்டிய பிறகும் அவள் தனிமையில் தங்கிப் பின் வீடு சென்றால், ஊர் என்ன சொல்லும்? நீ ஆண்மகன். அவள் பெண்ணாயிற்றே!'' என்றது உள்மனம். மனிதனுக்கு சிந்திக்கும் ஆற்றல் மட்டும் இல்லாவிட்டால், மிருகத்துக்கும் அவனுக்கும் வேற்றுமை ஏது?

வந்தபோதிருந்த குதூகலம் மனநிறைவுமின்றி நெற்களத்தை நோக்கி நடந்து சென்றான் முத்து, பண்ணையார் பொன்னம்பலம் களத்திற்கு வந்து விட்டிருப்பதைக் கண்டதும் துணுக்குற்றான். "எங்கே போயிருந்தாய் முத்து?'' என்றார் பண்ணையார். அவருக்கு அவன் வாய் பதில் கூறு முன் கண்கள் களத்தை நோக்கின மனம் பகீரென்றது. நெற்குவியலைக் காணோம்! அங்கு மிங்கும் நெல் சிதறிக் கிடந்தது!

"நான் கேட்பது காதில் விழுகிறதா முத்து? களத்திலிருந்த நெற்குவியல் எங்கே?''

முத்துவின் கைகால்கள் வெடவெடத்தன. கைதிக் கோலத்தில் நின்றான். "எனக்கு ஒன்றும் தெரியாதுங்க!'' வாய் குழறியபடி கூறினான்.

"கவலை வேண்டாம் முத்து! இப்படித்தான் நடந்திருக்குமென்று என்னால் யூகிக்க முடிகிறது!''

"எப்படிங்க?''

"வள்ளியைக் காண நீ சென்றிருப்பாய். தருணம்பார்த்திருந்த கந்தனும் அவனது ஆட்களும்...''

"இருக்கலாமுங்க!''

"சந்தேகம் என்ன வேண்டிக்கிடக்கிறது?...இப்போதாவது சொல் கந்தன் இருக்கிற வரையில்—?''

"உண்மைதான்!''

"வள்ளியை நீ மணந்து கொள்வதும் கந்தனைக் கம்பி எண்ண வைப்பதும் உனது தலையசைப்பில் இருக்கிறது! என்ன சொல்கிறாய்?''

"நேரில் பார்க்காமல் எப்படிங்க அவன் மீது நான் பழி சுமத்துவது'' பண்ணையாருக்குக் கோபம் வந்தது. "அப்படியானால் என்னை ஏமாற்றலாம் என்று நீ தான் நெல்லைப் பதுக்கியிருக்க வேண்டும்! அல்லது கந்தனுக்கு நீ உளவிருந்திருக்க வேண்டும்; என்னை மோசம் செய்யப் பார்க்கிறாய் முத்து! என்னிடம் அது நடக்காது!''

முத்து காதைப் பொத்திக்கொண்டான். "நான் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்!''

## புன்மொழிப் புலவர் பொன்விழா

★

பெரியோர்களே! தோழர்களே!

வணக்கம். பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும். நற்றமிழ் வாழ-வளர அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும், சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொது நலத்துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும் போராடவும்-தடியடிதாங்கவும் சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும் தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன பன்மொழிப் புலவர் கா, அப்பாத்துரையார் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன்விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக்கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன்விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல். அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பீடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பீடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்கவேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பண முடிப்பைப் பரிசாக வழங்க வேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலர் பொன்விழாக் குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினைக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற அறிஞர் அண்ணா அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி தந்து உதவுவோர் 'சி. என் அண்ணாதுரை, c-o 'நம் நாடு', 24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்,

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும் பன்மொழிப் புலவரின் பொன்விழா முயற்சி வெற்றியுறப் பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13,
23-7-57

அன்பன்,
**இரா. நெடுஞ்செழியன்**
பொதுச்செயலாளர்.

"எனக்குச் சேரவேண்டிய நாற்பது கலம் நெல்லையும் நாளை விடிவதற்குள் நீ கொடுத்தாக வேண்டும்!"

வேதனை சூழ்ந்த நெஞ்சத்தினனாய், தள்ளாடி வீடு நோக்கி நடந்து சென்றான் முத்து. அவன் கன்னங்களில் கண்ணீர் முத்துக்கள் உருண்டன!

* * *

முத்துவின் வீட்டு வெளித் திண்ணையில் நான்கு போலீஸ்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைக் கண்டதும் முத்து திகைப்படைந்து, மிரள மிரள அவர்களைப் பார்த்தபடி வீட்டினுள் மெதுவாக நுழைந்தான். "உன் பெயர்தான் முத்துவா?" என்ற குரல் முத்துவின் காதில் கர்ணகடூரமாக ஒலித்தது.

"ஆமாங்க!"

"உன் வீட்டை நாங்கள் சோதனை போட வந்திருக்கிறோம்!"

"எதற்குங்க?"

"கள்ளச்சாராயத்தை நீ பதுக்கிவைத் திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது!"

"வீணாக என் மனசைப் புண்படுத்தாதீங்க! ஊரிலே யாரையாவது கேட்டுப் பாருங்க என்னைப்பற்றி! அந்த மாதிரி தப்புத் தண்டாவுக்கெல்லாம் நான் போக மாட்டேனுங்க! அரை வயிற்றுக்கு கஞ்சி யென்றாலும் நான் மானத்தோடு குடிப்பவனுங்க!"

"அதை நாங்களே தெரிந்து கொள்கிறோம், வீட்டைச் சோதனை செய்தான பிறகு!" என்றார் வந்தவர்களில் ஒருவர். "பண்ணையார் பொன்னம்பலம் வரட்டுமே!" என்றார் இன்னொருவர்.



உலகிலேயே மிக அதிகமான பக்கங்களுடன் வெளியான தினத்தாள் "நியூயார்க் டைம்ஸ்" என்ற அமெரிக்க பத்திரிக்கை 1956 மே 6-ந் தேதிவெளியான அந்தப்பத்திரிக்கையின் இதழ் 516 பக்கங்களைக் கொண்டதாயிருக்கிலது.

மிக அதிகமான பிரதிகள் விற்பனையாவது, "நியூஸ் ஆப்தி வோர்ல்டு" என்ற இலண்டன் பத்திரிக்கைக்கு ஒவ்வொரு இதழிலும் சுமார் 90 லட்சம் பிரதிகள் அந்தப் பத்திரிக்கைக்கு விற்பனையாகிறது.

"ஒருவரும் தேவையில்லீங்க. உங்களிஷ்டம்போல் வீட்டைச் சோதனை செய்து கொள்ளுங்க!" என்றான் முத்து.

அதற்குள் கிராமமக்கள் கூடிவிட்டார்கள். முத்துவின் வீட்டில் போலீஸ்காரர்கள் சோதனை போட வந்திருக்கிறார்கள் என்றறிந்த எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

சோதனை செய்யப்பட்ட வீட்டிலிருந்து நான்கு சாராய பாட்டில்கள் கண்டெடுக்கப்பட்டன! தாரைதாரையாகக் கண்களினின்றும் நீர் பெருகத் தலை தாழ்ந்து நின்றான் முத்து.

குசுகுசுவென்று கிராம மக்கள் பேசிக்கொண்டார்கள், ஆனால் அந்த வார்த்தைகள் முத்துவின் காதில் நன்றாக விழுந்தன. சிறிது நேரத்திற்கு முன்பு தன்னை மிக நல்லவனாக மதித்த அத்தனை பேரும், மிகவும் கேவலமாக மதிக்கிறார்கள் இப்போது—என்றறிந்து தாங்கொணா வேதனையடைந்தான் முத்து. பொதுமக்கள் எதையாவது பேசிக்கொள்ளட்டும்; அவனது உயிருக்குயிரான வள்ளி—அவள் அவனைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டிருப்பாள்?

"ஏன் நீலிக்கண்ணீர் வடிக்கிறாய்? மானத்தோடு வாழ்பவனே! எங்கே போயிற்று உனது மானம்?"-போலீஸ் அதிகாரியின் குரல் ஏளனத்துடன் ஒலித்தது.

ஜனத்திரளை விலக்கிக் கொண்டு பண்ணையார் நுழைந்தார். அவரைக் கண்டதும் முத்து கேவிக்கேவி அழுதான். அவர் அவனுக்கு ஆறுதல் கூறினார்; தைரியமூட்டினார்.

போலீஸ் அதிகாரியின் அனுமதியின் பேரில் பண்ணையார் பொன்னம்பலம் முத்துவைத் தனிமையில் சந்தித்தார். "என்ன நினைக்கிறாய் இப்போது கந்தனைப் பற்றி?" என்றார்.

"எல்லாம் அவன் வேலையாகத்தான் இருக்கும்; இப்போது தான் தெரிகிறது!" என்றான் முத்து. அவன் குரலில் ஆத்திரம் கலந்திருந்தது.

"பயப்படாதே முத்து! இப்போதும் குடி முழுகிப் போகவில்லை; நீ நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகக்கூறுகிறேன்..."

"என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டான்.

"வேறு வழியில்லை; கந்தன் மீது பழி சுமத்தவேண்டும்—காணாததைக் கண்டதாக நீ பொய் சாட்சி சொல்லவேண்டும்!"

"நேரில் பார்க்காததை எப்படி நான்..."

"உன்வள்ளி ... உனக்காகக் காத்திருக்கும் வள்ளி!...உங்கள் எதிர்கால நல்வாழ்வு... நினைத்துப்பார்!"

"எது எப்படியானாலும்..."

"முடியாது-என்கிறாயா?"

அமைதியாக "ஆம்" எனத் தலையசைத்தான் முத்து.

"முடிவாக?"

"ஒன்றுமில்லை"

"உன் வள்ளி?"

"பரவாயில்லை. நடப்பது நடக்கட்டும். நான் யாருக்கும் தீங்கு நினைத்ததில்லை. சந்தர்ப்பம் என்னுடன் விளையாடுகிறது! உண்மை எப்போதும் வென்றே தீரும்!"

என்று கூறிவிட்டு, அதிகாரிகளின் முன்னிலையில் போய் நின்றான் முத்து. பண்ணையார், அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்தார். கைதிக்கோலத்தில் முத்து அழைத்துச்செல்லப்பட்டான்.

வள்ளி அழுது குமுறினாள்; வேதனையைத் தாளாமல் அரற்றினாள். முத்துவுக்கே வள்ளி என்று சிறிது நேரத்திற்கு முன்பெல்லாம் பெருமையுடன் கூறிக்கொண்டிருந்த அவள் பெற்றோர், அவளெதிரிலேயே முத்துவை இப்போது இகழ்ந்துரைத்தார்கள்; "கிளியைப் பூனையிடம் ஒப்படைக்க நினைத்திருந்தோமே! நல்ல வேளையாகத் தப்பினோம்!" என்று பேசிக்கொண்டார்கள். புயலிற் சிக்கிய மாலுமியென கலங்கரை காணாது தவித்தாள் வள்ளி. அவளுக்கு ஆறுதல் கூறுவோரெல்லாம், முத்துவை வாய் வோய வசைமாரிப் பொழிபவர்களாகவே இருந்தார்கள். மரணத்திலன்றி அமைதி காண முடியாது என்று முடிவு கட்டினாள் வள்ளி.

சாப்பிடாமல் கூட படுத்துக் கொண்டாள் வள்ளி. அழுதழுது அவள் முகம் வீங்கிவிட்டது. அவள் தலையணை தெப்பமாக நனைந்துவிட்டது. எப்போது ஊர் அடங்கும் என்று காத்திருந்தாள்.

பண்ணையார் வீட்டுக் கடிகாரத்தில் டாண்டாண் என்று பன்னிரண்டடித்தது, வள்ளியின் காதுகளுக்கு நன்றாகக் கேட்டது! எல்லோரும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். படுக்கையைவிட்டு வள்ளி எழுந்தாள். தலையணைக்கு அடியில் வைத்திருந்த கயிற்றை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, புழக்கடை வழியாகப் புளியந்தோப்பை நோக்கிப் புறப்பட்டாள்.

இருளடர்ந்த அந்தத் தோப்பினுள் நுழைந்தாள், சலசலவென்று பின்புறமிருந்து சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். ஒன்றும் தெரியாதமையிருட்டு! இலேசாக அடித்த காற்றில், தரையில் விழுந்து கிடந்த உலர்ந்த சருகுகள் ஓசை எழுப்பின.

சேலையை வரிந்து கட்டிக் கொண்டு, தாழ்ந்த கிளைகளைக் கொண்ட ஒரு புளிய மரத்தின் மீது வள்ளி ஏறினாள். கைக்கு எட்டிய ஓர் கிளையில் கயிற்றை முடிச்சிட்டாள்; இன்னொரு முனையில் சுருக்கு வைத்தாள்.

"யாரது?"

இந்தக் குரல்கேட்டு வள்ளியின் கால்கள் வெடவெடத்தன. மீண்டும் அதே கேள்வி. வள்ளி மௌனம் சாதித்தாள்.

"மரத்தின்மேல் ஏறியிருப்பது யார்?" குரல் தெளிவாகக் கேட்டது. தெரிந்த குரல்; ஆனால் யார் குரல் என்று புரியவில்லை. "ஒருவேளை, பேய் பிசாசு என்கிறார்களே, அப்படி ஏதாவது?" வள்ளியின் கால்கள் தள்ளாடின. கீழே விழுந்து விடாமல் மேலிருந்த கிளையை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். அந்த உருவம் அருகில் வந்து நின்றது; "கீழே இறங்கு!" என்றது. ஒன்றும் பதில் பேசாமல் வள்ளி மரத்திலிருந்து இறங்கி நின்றாள். "வீட்டிற்குப் போ!" என்றது அந்த உருவம் பேசுவது மனிதன்தான் என்ற அளவுக்கு வள்ளி உணர்ந்தாள். அவளுக்குத் துணிவு பிறந்தது. "போகமுடியாது" என்றாள். "நீ தற்கொலை செய்து கொள்வதை நான் அனுமதிக்கமாட்டேன், வள்ளியண்ணி! வீட்டிற்கு நட. இவ்வளவுதானா உனது அறிவு?" என்ற குரலைக் கேட்டதும், பேசுபவன் கந்தன்தான் என்று தெரிந்துகொண்டாள் வள்ளி.

"என்னைத் தடுக்கவேண்டாம்!" என்றாள் தழுதழுத்த குரலில்; அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை.

"யாவும் எனக்குத் தெரியும். முத்தண்ணன் நிரபராதி என்பதுமட்டுமல்ல; குற்றவாளி யாரென்பதும் எனக்குத் தெரியும்!"

"சொன்னால் நம்பமாட்டாய் வள்ளியண்ணி! களத்து நெல்லைக் களவிட்டதும் கள்ளச் சாராயத்தை வீட்டில் வைத்ததும் யாரென்று நினைக்கிறாய்?"

"சொன்னால்தானே தெரியும்?"

"பண்ணையார் பொன்னம்பலம்!"

"என்ன!"

"மயக்கம்போட்டு விழுந்து விடாதே வள்ளியண்ணி!"

"பண்ணையார் இப்படியெல்லாம் செய்ய, பண்ணையாரை 'அவர்' என்ன செய்தார்?"

"என்னைப் பழிதீர்க்க முத்தண்ணனைப் பயன்படுத்த முயன்றார் பண்ணையார். அவர் நம்பிக்கையைப் பாழ்படுத்திவிட்டது, முத்தண்ணனின் நேர்மையான உள்ளம்!"

"புரியவில்லையே!"

"என்னைப்பற்றித்தான் உனக்குத் தெரியுமே வள்ளியண்ணி, அடங்கி ஒடுங்கி வாழ்ந்து பழக்கப்படாதவனென்று! இந்தக் காணி நிலத்தை வைத்துப் பயிர் செய்து ஜீவிக்க முடியவில்லை; அவ்வளவு சோம்பேறித்தனம் எனக்கு. இந்த நிலத்தை விற்றுத் தொலைத்துவிட்டு, பட்டணத்

திற்குப் போய் ஏதாவதொரு கடை கண்ணிவைத்து பிழைத்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்தேன். நிலத்தை நான் விலை கூறுவதை அறிந்ததும், பண்ணையார் பறந்தோடி வந்தார் என்னிடம். சாகும்போது என் அன்னை கூறியதை என்னால் மறக்கமுடியவில்லை. 'உன்னால் பாடுபட முடியாவிட்டால்—நிலத்தை விற்க நேர்ந்தால்—யாருக்கு வேண்டுமானாலும் விற்றுவிடு மகனே; பொன்னம்பலத்திற்கு மட்டும் விற்காதே! அந்தப் பாவியால்தான் நமது குடும்பம் சீர்கெட்டது. அவனது பசப்பு வார்த்தையிலே மயங்கி, உனது தந்தை பரந்திருந்த நிலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொள்ளை கொடுத்தார். இந்த ஒரு காணி நிலம் என்மீது எழுதப்பட்டிருந்ததால் தப்பியது! என்மீது ஆணையாக, நிலத்தை அந்தப் பாவிக்கு விற்காதே!' என்று கூறிக் கண்ணீர்விட்டாள்.

"நிலத்தை அவருக்கு விற்க நான் சம்மதிக்காததால் பெருத்த ஏமாற்றமடைந்த பண்ணையார், யார்யாரையோ என்னிடம் அனுப்பிப்பார்த்தார். பத்துக்காணி நிலத்தில் விளையும் தானியம், இந்த ஒரு காணியில் விளையும்; தங்கம் விதைத்தால் தங்கமே விளையும்' என்பார்கள் கிராமமக்கள். பண்ணையாரின் விஷநாக்கில் நச்சுநீர் சுரந்தது. முயன்றார். நான் வளைந்துகொடுக்கவில்லை.

"முத்து அண்ணன் உன்னைக் காண இங்கு வந்த நேரத்தில், நெல்லைக் களவாடினார். நான்தான் களவாடினேன் என்று என்மீது பழி சுமத்தினார். பண்ணையார் பேச்சுக்கு முத்தண்ணன் உடன்பட்டிருந்தால், நான் சிறைச்சாலைக்குப் போக நேர்ந்திருக்கும். அபராதத் தொகையைக் கட்டி நான் மீளமுயன்றால், எனக்குப் பணந்தர யாரிருக்கிறார்கள்? அப்போது நிலத்தை விற்க முயல்வேனல்லவா?—பண்ணையாரின் இந்த எண்ணத்திலும் இடிவிழுந்தது! கள்ளச் சாராய விபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவாவது முத்தண்ணன் என்னைச் சிக்கவைப்பார் என்று நினைத்தார் பண்ணையார். பாவம்; அவருக்குப் பெருத்த ஏமாற்றம்!"

"உன்மீது அந்தப் பாவி கொண்ட வைரி, அவரைச் சிறையில் தள்ளிவிட்டதே!"

"வருந்தாதே வள்ளியண்ணி! முத்தண்ணனை நானேயே விடுதலை செய்ய நானிருக்கிறேன்!"

"எப்படி?"

"நான் குற்றவாளி யாகப் போகிறேன்!"

"நீயா"

"அப்போதே சிறை புகுந்திருப்பேன். பண்ணையார் நெல்லைப் பதுக்கிவைத்திருக்கும் இடம் தெரியாமல் குற்றத்தை ஏற்றால், வழக்கு பொறுப்பற்றதாகிவிடுமே என்று அஞ்சினேன். கண்டுபிடித்துவிட்டேன் நெல் பதுங்கியிருக்குமிடத்தை! இனி நான் சென்று கூறினால் உண்மையிலேயே நான் குற்றவாளி என்று கருதப்படுவேன். கள்ளச்சாராயத்தை வைத்தவனும் நான்தானென்று காரணத்தோடு சாதிக்க முடியும்! கலங்காதே வள்ளியண்ணி! நாளை முத்தண்ணனை விடுவிப்பது எனது பொறுப்பு!"

"வேண்டாம். ஒரு குற்றமும் செய்யாமல் நீ சிறை புக வேண்டாம்!"

"உங்கள் நிலையை எண்ணிப் பார்க்காமல் பேசுகிருயே வள்ளியண்ணி! உள்ளன்புடன் ஒருவரை யொருவர் நேசிக்கிறீர்கள்! இப்போது உங்களிருவர் வாழ்விலும் பயங்கரப் புயல் சூழ்ந்துவிட்டது! எனக்கென்ன நான் ஒண்டிக்கட்டை; அடக்கமில்லாதவனென்று ஊரிலே பெயரெடுத்து விட்டவன். இப்போது நான் சிறை செல்வதால், எதிர்காலத்தில் எனது வாழ்வு அதிகமாகப் பாதித்து விடாது. அப்படிப் பாதிப்பதாயினும், உன்னையும் முத்தண்ணனையும் துன்புறுத்துமளவு இல்லையல்லவா?...... என்ன செய்வது வள்ளியண்ணி! எல்லோருமே நலமாக வாழவேண்டுமானால், பண்ணையார் பொன்னம்பலம் போன்றவர்கள் திருந்த வேண்டும்...ஒன்று சொல்ல மறந்துவிட்டேன் வள்ளியண்ணி! எனது நிலத்தை நான் யாருக்கும் விற்கப்போவதில்லை. சிறையிலிருந்து நான் மீளும்வரை, நீயும் முத்தண்ணனும் உழுது பயிரிட்டுப் பலனை அனுபவியுங்கள்! நான் வந்ததும், என்னையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்! பாடுபடுவோம். சரிதானே?"

"சிறை செல்வதென்றே முடிவு செய்துவிட்டாயா"

கந்தன் சிரித்த வண்ணம், "மீண்டும் பழைய பல்லவியே தானா?" என்றான்.

"அவரை மீட்க வேறுவழி கிடையாதா? அதற்காக உன்னைத் தியாகம் செய்வதாகக் கூறுகிருயே! அவர் கூட இதற்குச் சம்மதிக்கமாட்டாரே!"

"இனி எனக்கு எவர் சம்மதமும் தேவையில்லை, தெய்வமே நீதி–மன்றத்தில் நின்று, 'நீ குற்றவாளியில்லை; முத்துதான் குற்றவாளி;' என்று கூறினாலும் அதன் கூற்றைப் பொய்யாக்கத் தயங்க மாட்டேன்! சந்தர்ப்ப சாட்சியங்கள் எனக்கு ஒத்தாசையாக இருக்கின்றன'!

தூரத்தில் யாரோ பேசும் குரல் கேட்டு, பேச்சை நிறுத்திக்கொண்டு கந்தன் உற்றுக் கவனித்தான். இலாந்தரைக் கையில் பிடித்துக்கொண்டு சிலர் அப்பக்கம் நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

"உன்னைத் தேடிக்கொண்டு வருகிருர்கள் வள்ளியண்ணி!"

"ஐயோ! இப்பொழுதுநான் என்ன செய்வது?"

"நீ தற்கொலை முயற்சி செய்ததாக அவர்களுக்கு தெரியக்கூடாது வள்ளியண்ணி! தயவு செய்து நான் சொல்வதைக் கேள்! வளம் நிறைந்ததாக இருக்கவேண்டிய உனது எதிர்காலம், வரட்சியுற்ற பாலைவனமாகிவிடக்கூடாது என்பதற்காகக் கூறுகிறேன்! மறுக்காதே வள்ளியண்ணி!"

"கேட்கிறேன்; சீக்கிரம் சொல்!"

வள்ளியின் காதில் கந்தன் மெதுவாக, நடிக்க வேண்டிய நாடகத்தைக் கூறினான்.

ஓவென்று வள்ளி அலற ஆரம்பித்தாள். "பாவி! விடு என்னை! தூங்கும்போது என்னைத் தூக்கி வந்து, அடாது செய்ய முயல்கிருயே! துன்மார்க்கா! தெய்வமே! உனக்கு கண்ணில்லையா? என்னை யாரும் காப்பாற்ற வரமாட்டார்களா?" என்று கதறினாள் வள்ளி. வள்ளியைத் தேடி வந்தவர்கள், அழுகுரல் கேட்டு அவ்விடத்திற்கு ஓடிவந்தனர்!

கதாநாயகி வள்ளி காப்பாற்றப்பட்டாள்! வில்லன் கந்தன் ஓட்டம் பிடித்தான்! வெற்றிகரமாக 'நாடகம்' முடிவுற்றது!

கந்தன் மறுநாள் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டான்!

தூங்கும்போது வள்ளியைத் தூக்கிச் சென்றது, வள்ளியை மணந்துகொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு, அதற்குப் போட்டியாக இருந்த முத்துவின் வீட்டில் சாராய பாட்டில்களை வைத்தது, பண்ணையார் பொன்னம்பலத்தின். களத்திலிந்த நெல்லைக் களவாடியது – இப்படி மூன்று குற்றங்கள் கந்தனின் மீது சுமத்தப்பட்டன! குற்றங்களைக் கந்தன் ஏற்றுக் கொண்டான். முத்து விடுதலை யடைந்தான்.

பண்ணையார் பொன்னம்பலத்திற்குக் கந்தன் விளங்காத புதிராகிவிட்டான், செய்யாத குற்றத்திற்குத் தண்டனை ஏற்றுக்கொண்ட அவனது தியாகவுள்ளத்தைப் புரிந்துகொண்டவர்கள், வள்ளியும் முத்துவும் தான்.

கண்களில் நீர் ததும்பி நின்ற வள்ளியையும் முத்துவையும் பார்த்து சிறைசெல்லும் நேரத்தில் கந்தன் கூறிய வார்த்தைகள் இவை:

"அந்தக் காணி நிலம் உங்களுடையது! விரைவில் மணம் செய்துகொள்ளுங்கள். நான் திரும்பி வரும்போது ஒரு சின்னப்பயல் 'சிற்றப்பா!' என்று என்னை அழைக்கவேண்டும்!"

அந்தத்துயரத்திலும் வள்ளி சிரித்துவிட்டாள். கந்தன் புன்னகை புரிந்தவண்ணம், முத்துவின் கண்ணீரைத் துடைத்தான். ○

## இலக்கியம்

(5–ம் பக்கத் தொடர்ச்சி)

"நீ அடிக்கடி அவரைச் சந்திப்பது உண்டா?" என்று தோழி கேட்கிருள்-

"பல முறை சந்திப்பேன்!" என்கிருள் விறலி.

அவள்தான் தலைவனை பரத்தை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டிருக்கிருள், மேலும் கொண்டு அவனுக்காகப் பணம் பெற்றுச் செல்வதற்காக வந்திருக்கிருள் என்று முடிவு செய்துகொண்டு "இந்தச் செருக்கிதான் நம் தலைவரைக் கெடுத்தது!" என்று தோழி அழுகிருள். தலைவி அப்படியே திகைத்துப்போய் இருந்து விடுகிருள்.

தோழி அக்கம் பக்கத்திலுள்ள உற்ருர் உறவினரையெல்லாம் கூவி அழைக்கிருள். அவர்கள் எல்லோர்க்கும் விறலியைச் சுட்டிக்காட்டி "இவள்தான் தலைவரிடம் தூதாக நடந்து, தலைவரைப் பரத்தையிடம் கொண்டுபோய் சேர்த்தது மட்டுமல்லாமல் மற்றுமொரு பரத்தையிடம் அவரைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டி இப்பொழுது வந்திருக்கிருள்! அவருக்காகப் பரிந்துபேசி பொருள் பெற்றுச் செல்லலாம் என்று வந்திருக்கிருள்!" என்று சினத்தோடு கூறினுள்.



சினிமா பார்ப்பதால் கெடுதியா என்ருல், நியூசீலத்துக்காரர்களும் ஆஸ்திரேலியர்களும் அவ்வாறு நினைப்பதாகத்தெரியவில்லை மக்கள் தொகையுடன் கணக்கிட்டுப்பார்க்கும்பொழுது அங்குதான் உலகிலேயே அதிகமாகச் சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. இந்தியாவில் 1½லட்சம்பேர்களுக்குஒருகொட்டகை இருக்கிறது. நியுசிலந்திலும் ஆஸ்திரேலியாவிலும், 3500 பேர்களுக்கு 1 கொட்டகை இருக்கிறது. அதாவது அங்குள்ள எல்லாக் கொட்டகைகளிலும் ஒரேபடத்தைப் போட்டால், சனி ஞாயிறு இரண்டு நாட்களில் (7-காட்சிகள்) ஆஸ்திரேலியா நியுசீலத்து இவைகளிலுள்ள எல்லா மக்களும் அந்தப் படத்தைப் பார்த்து முடித்துவிடுவார்கள்! சினிமா பார்க்க அவ்வளவு வசதிகள் அங்கு. அதனால் அவர்கள் கெட்டுப்போனதாகத் தெரியவில்லை. நம்மைவிடப் பல மடங்கு நன்ருக அவர்களால் வாழ முடிகிறது.

# திட்டத்துக்கு வெளிநாட்டு உதவி!

—(0)—

## பிரிட்டன் கைவிரிக்கிறது.

—(0)—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடும்பொழுது வெளிநாட்டு உதவி கிடைக்கு மென்று எதிர்பார்த்தார்கள். இவர்கள் முதலில் போட்ட பொழுது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு முதலீடு மொத்தத்தில் 4800 கோடி ரூபாயாக இருந்தது. அதில் திட்டக் குழுவினர் வெளிநாட்டிலிருந்து 800 கோடி ரூபாய் எதிர்பார்த்தனர்.

ஆனால் திட்டக் குழுவினர் எதிர்பார்த்தது போல, வெளிநாட்டிலிருந்து பணம் வராது போலிருக்கிறது.

"ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து விட்டால் போதும் வெளி நாட்டிலிருந்து பணம் வந்து குவியும். பண்டித நேரு ஒரு தடவை புன் சிரிப்புடன் கைகுலுக்கினால் போதும், அமெரிக்கா அப்படியே அள்ளிக்கொடுத்து விடும், பிரிட்டன் வேண்டுமளவுக் கொட்டிக் தரும், ருஷியா இந்த முதலாளி நாடுகளுடன் போட்டியிட்டு இந்தியாவுக்கு உதவ முன் வரும். இவைகள் போதாதென்று கானடா உதவும், ஆசுத்திரேலியா உதவும், நியுசிலாந்து உதவும்!" என்று வெளி நாடுகளிலிலிருந்து அமோகமான உதவி கிடைக்குமென்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது. இந்தியாவின் மதிப்பும், நேருபண்டிதரின் புகழும் வெளிநாடுகளில் பரவியிருந்ததைப்பற்றீ பத்திரிக்கைகள் எழுதியதைப் பார்த்தால், திட்டத்துக்கு வேண்டிய பணத்தை எந்த அளவுக்கு வெளிநாடுகளில் வாங்குவது என்பதுதான் யோசிக்க வேண்டியது போலிருந்தது. ஒவ்வொருவரும் போட்டியிட்டு உதவ முன்வரும் பொழுது, "இவ்வளவு அதிகம் கொடுக்க வேண்டாம். இதில் பாதியளவு கொடுத்தால் போதும்" என்று இந்தியா கூறவேண்டிய அளவு அயல் நாட்டு உதவிகள் நிச்சயமாக இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள்.

அமெரிக்காவிலிருந்து கோடிக்கணக்கில் உதவிப் பணம் கிடைக்கும், பிரிட்டனிலிருந்து அமோக ஆதரவு கிடைக்கும் என்று மக்கள் நம்பிய காரணத்தால்தான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி காங்கிரசுக் கட்சி பேசியபொழுதெல்லாம் மக்களுக்கு அதனால் கிடைக்கும் பலன்கள் மட்டும் கவனத்திலிருந்ததேயன்றி, ஆகப் போகும் செலவைப்பற்றிக் கவலைப்படவில்லை. திட்டத்துக்காகும் செலவு வெளிநாட்டிலிருந்து வந்துவிடும் என்று மக்கள், தவருகவோ சரியாகவோ நம்பினார்கள். அதனால்தான் திட்டத்துக்காக அதிக வரிகள் விதிக்கப்படும் என்று பொதுமக்கள் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை.

மக்கள் எதிர்பார்த்தபடி அமோகமான அளவில் வெளிநாட்டு உதவி இந்தியாவுக்குக் கிடைக்கவில்லை.

மக்களுக்காவது புள்ளி விவரங்கள் சரியாகத் தெரியாது. ஏற்றுமதி இறக்குமதி, வெளிநாட்டு நிதி நிலைமை இவைகளைப் புள்ளி விவரங்களுடன் துருவித் துருவி ஆராய்ந்து, கணக்குப்போட்ட திட்டக்குழுவினர் எதிர்பார்த்தபடியாவது வெளிநாட்டு உதவி கிடைக்குமா என்ருல், அதுவும் சந்தேகமாயிருக்கிறது.

திட்டக்குழுவினர் எதிர்பார்த்தது 800 கோடி ரூபாய்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், முதல் ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு போய்க்கொண்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 160 கோடி ரூபாய் தேவைப்படுமென்ருல், முதல் இரண்டு ஆண்டுகளுக்கு 320 கோடி ரூபாய்க்கு வழி செய்திருக்க வேண்டும். பண்டித நேரு இங்கிலாந்துக்கு நேரில் போய்ப் பார்த்துங்கூட, திட்டத்துக்கு வேண்டிய பணம் வெளி நாட்டிலிருந்து வருவதாகக் காணோம்.

முதலில் வி. கே. கிருஷ்ண மேனன் இங்கிலாந்துக்குச் சென்ருர், திட்டத்துக்கு வேண்டிய நிதி நிலைமைகளைப்பற்றி ஆரம்ப பேச்சுகளை நடத்தினர். 20 கோடி பவுன் (266 கோடி ரூபாய்) கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகப் பத்திரிக்கைகள் தெரிவித்தன.

இரண்டாவதாக இந்தியப் பிரதமர் பண்டிதநேரு அவர்களே நேரில் சென்ருர். கிருஷ்ணமேனன் சென்றபொழுது 266 கோடி ரூபாய் எதிர்பார்த்தவர்கள் பண்டித நேருவுக்கு 300 கோடி அல்லது 400 கோடி நிச்சயமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். பண்டித நேரு போயிருந்தபொழுது, திட்டத்திற்கு வேண்டிய நிதிபற்றிய பேச்சு நடைபெற்றது. பத்திரிக்கைச் செய்திகள் முன்போல அவ்வளவு உற்சாகத்துடன் இல்லை. கிருஷ்ணமேனன் போயிருந்தபொழுது 260 கோடி ரூபாய் உதவியை எதிர்பார்த்த பத்திரிக்கைகள், நேருபண்டிதர் சென்றபொழுது 130 கோடி ரூபாய் அளவுக்குத்தான் கடன் கிடைக்கக்கூடுமென்று எழுதின.

கிருஷ்ணமேனனைவிடப் பண்டித நேருவுக்குச் செல்வாக்கு குறைந்துவிட்டது என்று அர்த்தமல்ல, இந்தியாவின் பணத்துக்கு-நிதி நிலைமைக்கு அந்த அளவு செல்வாக்கு குறைந்துவருகிறது என்று அர்த்தம்.

திட்டக் குழுவினர் எதிர்பார்த்தது 800 கோடி ரூபாய், அதில் இங்கிலாந்திலிருந்து 260 கோடி ரூபாய் வருமென்று எதிர்பார்த்து, பின் அது 130 கோடியாகக் குறைந்தது.

அந்த 130 கோடி ரூபாயாவது நிச்சயமாக வருமா என்று பார்த்தால், அந்தத் தொகையும் வராதுபோலிருக்கிறது. இலண்டனிலிருந்து வெளிவருகிற **எகானமிஸ்ட்** என்ற பொருளாதாரப் பத்திரிக்கை "பிரிட்

---

"தலைவரை சினங்கொள்ளாமல் மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளத்தான் வந்திருக்கிறேனேயல்லாமல், வேறொன்றுமில்லை" என்று விறலி மறுமொழி பகர்கிருள்.

தோழி உற்ருர் உறவினரைப் பார்த்து, "எல்லோரும் இப்பொழுதே புறப்படுங்கள். இப்பொழுதே போய்த் தலைவரைக் காத்துக்கொள்வோம். இல்லையென்ருல், இவள் அவரை வேருெரு பரத்தை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவாள். இவளுடைய கருத்து நிறைவேற நாம் இடங்கொடுத்துவிட்டால், பின்னர் நாமெல்லோரும் ஓடி ஒளிய வேண்டியதுதான். தன்னை எதிர்த்துப் போரிட வந்த ஆரிய மன்னர்களை, மலையன் வாட்படை வீரர்களோடு சென்று, முள்ளூர்ப் போர்க்களத்தில், வேற்படையை ஓச்சி விரட்டியபோது, அவ் ஆரிய மன்னர்களெல்லாம் எப்படி ஓடி ஒளிந்தார்களோ அப்படித்தான் நாமும் ஓடி ஒளிய வேண்டி நேரிடும்!" என்று உரத்த குரலில் தோழி முழக்கமிடுவதைக் கேட்ட விறலி, அஞ்சி, அவ்விடம் விட்டு ஓடி விடுகிருள்.

தலைவிக்குத் தலைவன்மீது ஏற்பட்ட சினம், விறலிவந்து சென்றதால் மேலும் வளர்ந்து நின்றதேயல்லாமல் தணிந்தபாடில்லை!

* * *

இந்தக் காதற் காட்சி நற்றிணை **170-**ஆம் செய்யுளில் கண்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தச் செய்யுள் மருதத்திணையைச் சேர்ந்த, "தோழி விறலிக்கு வாயில்மறுத்தது" என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

மடக்கண் தகரக்
　கூந்தல் பணைத்தோள்
வார்ந்தவால் எயிற்றுச்
　சேர்ந்துசெறி குறங்கில்
பிணையல் அம்தழைத்
　தைஇத் துணையிலள்
விழவுக்களம் பொலிய
　வந்துநின் றனளே
எழுமினே எழுமின்எங்
　கொழுநற்கு ஆக்கம்
ஆரியர் துவன்றிய
　பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த
　ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஓடியாங்குநம்
　பன்மையது எவனே இவள்
நன்மைதலைப் படினே.

[நற்றிணை—170]

[பொழிப்புரை; மடப்பத்தையுடைய கண்பார்வையையும், மயிர்ச்சாந்து அணிந்தகூந்தலையும், பருத்த தோளையும், ஒழுங்காக அமைந்த வெள்ளிய பற்களையும், திரண்டு நெருங்கிய துடைகளையும் உடைய ஒப்பில்லாத இவ்விறலி பிணைத்த அழகிய தழையுடையையுடுத்து திருவிழாச் செய்யும் இவ்விடமெங்கணும் பொலிவெய்துமாறு வந்து நிற்றலாயினள் காணுங்கோள்; நம் காதலரை இன்னும் வேருேர் பரத்தையிடத்து இவள் தூது சென்று செலுத்தாதபடி நாம் பாதுகாப்போமாக, எழுங்கள், எழுங்கள்; இவள் கொண்ட காரியம் கைகூடினல். ஆரியர் நெருங்கிச் செய்த போரின் கண்ணே பெரிய புகழையுடைய முள்ளூர்ப் போர்க்களத்துப் பலருடன் சென்று உறையினின்று உருவிய ஒள்ளிய வாட்படையையுடைய மலையனது ஒப்பற்ற வேற்படையை அஞ்சி அவ் ஆரியப்படை ஓடியது போலப் பலர்கூடிய நம்முடைய கூட்டமும் ஒழியவேண்டியதல்லாமல் வேறு பலன் என்ன காணமுடியும்?

தகரக்கூந்தல்-மயிர்ச்சாந்தணிந்த கூந்தல்; பணை-பருத்த, வார்ந்த-நேரிய; ஒழுங்கான; குறங்கு-துடை.]

* * *

காதலன் ஒழுக்கந் தவறிய தன் காரணமாகக் காதலி மிக்க சினமுடையவளாகக் காணப்பட்டாலும், அவனை மீண்டும் ஒழுக்கந்தவற விடக்கூடாது என்பதிலே காதலியும் தோழியும் எவ்வளவு அக்கரையுடையவர்களாக இருக்கிருர்கள் என்பதை இச்செய்யுள் நயம்பட விளக்கிக்காட்டியுள்ளது.

தலைவன் பரத்தைமீது விருப்பங்கொண்டு தலைவியைவிட்டுப் பிரிந்து செல்வதும், விறலி தலைவனுக்கும் பரத்தைக்குமிடையே தூதுசென்று வருவதும், தலைவியின் ஊடலைத் தீர்க்க தலைவனல் விறலி அனுப்பப்படுவதும், தலைவியும் தோழியும் சினங்கொண்டு விறலியைத் திருப்பி அனுப்புவதும்ஆன பழக்கங்கள் இப்பாடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

மலையன் முள்ளூர்ப் போர்க்களத்தில் ஆரிய மன்னர்களை எதிர்த்து, அவர்கள் ஓட ஓட அவர்களை விரட்டியடித்தான் என்ற வரலாற்றுச் செய்தி உணர்த்தப்பட்டுள்ளது. ○

டிஷ் அரசாங்கத்திடமிருந்து இந்தியாவுக்குக் கடன் கிடைக்காது'' (No Government Loan for India) என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் கொடுத்து எழுதிவிட்டது! ஆக இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து குறிப்பிடத்தக்க கடன்தொகை எதுவும் கிடைக்காது.

இங்கிலாந்து அரசாங்கம் தராவிட்டாலும், இங்கிலாத்திலுள்ள தனிப்பட்ட கம்பெனிகள், முதலாளிகள் இந்தியாவுக்கு முன் வருவார்களா என்றால் அதுவும் இருக்காது என்று "எகானமிஸ்ட்'' திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

வெளிநாடுகளில் இந்தியா எதிர்பார்த்த உதவி ஏன் கிடைக்காமற் போகிறது. "பினான்சியல் டைம்ஸ்'' என்ற மற்றொரு பொருளாதாரப் பத்திரிக்கையில் பின் வருமாறு காரணமும் யோசனையும் தரப்பட்டுள்ளன. "இந்தியா தனது பொருளாதார நிலையைச் சீர்படுத்திக் கொண்டால் ரூபாயின் மதிப்பை திடப்படுத்த, பிரிட்டனின் பொருளாதார நிலையைப் பாதிக்காத அளவு உதவி செய்ய இயலும்'' இதிலிருந்து இரண்டு குறிப்பு தெளிவாகின்றன.

ஒன்று வெளிநாட்டார் கருத்துப்படி, இந்தியப் பொருளாதாரம் சீர்கேடடைந்திருக்கிறது.

இரண்டாவது, இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்துகொண்டிருக்கிறது.

இந்த இரண்டையும் சரிப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டால், இங்கிலாந்து உதவ முன் வருகிறது. இந்தியப் பொருளாதார நிலையை உயர்த்தத் திட்டங்கள் போடப்போய், இருக்கிற நிலைமை மோசமாகாமலிருக்க திட்டங்கள் போடவேண்டியிருக்கிறது!

பிரிட்டன் கைவிரித்து விட்டது. கிருஷ்ணமேனனும், நேரு பண்டிதரும் சென்று பார்த்தும் இந்த நிலைமை என்றால், வேறுயார் போய் கடனை வாங்கிவரப் போகிறார்கள்.

பிரிட்டன் இல்லையென்றதும் அமெரிக்கா பக்கம் இந்திய அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது. நிதி மந்திரி கனம் கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்காப் போகப் போகிறாராம். அமெரிக்க "மாமா'' "கிச்சு மருமானுக்கு'' என்ன தருகிறார் என்று பார்க்கலாம்! ○

## திருமங்கலத்தார் திருவாய்மொழி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் காட்டுகிறோம். தென்னாட்டின் வளங்களைக் காட்டுகிறோம், வளங்கள் பயன் படுத்தப்படாத காரணத்தால், நாட்டில் வறுமை படர்ந்திருப்பதைக் காட்டுகிறோம். தென்னாட்டுக்குச் செய்யப்படும் வஞ்சகத்தை தக்க ஆதாரங்களுடன், புள்ளிவிவரங்களுடன் நாம் கூறுகிறோம்.

வடநாட்டுச் சீமான்களுக்கு வக்காலத்து வாங்கிவந்து பேசும் திருமங்கலத்தாருக்கு திறமையிருந்தால், நாம் காட்டுகிற ஆதாரங்களை, காரணங்களை மறுத்துப் பேசட்டும்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தென்னாட்டுக்குரிய பங்கு வழங்கப்படவில்லையென்று புள்ளிவிவரங்களுடன் நாம் கூறுகிறோம். திருமங்கலத்துப் பெருமகனார் அதை மறுத்து, தென்னாட்டுக்கு அதிகமான அளவு கிடைத்திருப்பதாக ஆதாரத்துடன் நிரூபிக்கட்டுமே!

மத்திய அரசாங்கத்தின் ஆதரவில், வடநாடு தொழில் மயமாகிறது, தென்னாடு வெறும் சந்தைக்காடு ஆகிறது, என்று பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் காட்டிக் கூறுகிறோம்; திருமங்கலத்து-மாஜி மந்திரி-தற்கால (தற்காலிக) தமிழ்நாட்டுத்தலைவர் இல்லையென்று புள்ளிவிவரங்களுடன் கூறட்டுமே!

வடக்கில் இயந்திரத் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு 600 ரூபாய் வருமானம் கிடைத்தால் தென்னாட்டில் அதேவித வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிக்கு 300 ரூபாய் வருமானம்தான் கிடைக்கிறது என்று தொழில்வளத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை எவ்வாறு பாதித்துள்ளது என்று கூறுகிறோம்.

வடநாட்டில் சம்பாதிப்பவர்கள் தொகை 100க்கு 49 அளவுக்கு உயர்ந்திருக்கும்பொழுது தென்னாட்டில் 100க்கு 31 பேர்களுக்குத்தான் சம்பாதிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது என்று வேலையில்லாத்திண்டாட்டம் தென்னாட்டில் மிகுந்திருப்பதைக் காட்டுகிறோம். திருமங்கலத்துத் திவ்ய புருஷர் அதை மறுப்பதுதானே!

தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது, தென்னாடு வஞ்சிக்கப்படுகிறது, தென்னாடு தேய்க்கப்படுகிறது என்பதற்கு நாம் மட்டுமல்ல, நமது கட்சியுடன் சிறிதும் தொடர்பில்லாத மற்ற அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் தரும் கருத்துரைகளையும் நாட்டு மக்களின் முன் வைத்தோம். தமிழ்நாட்டுத்தலைவர் என்ற பட்டத்துடன் பவனி வரப் புறப்பட்டிருக்கும் திருமங்கலத்தார் அந்தக் கருத்துரைகளுக்கு மறுப்பு தெரிவிக்கவேண்டும்.

வழக்கைப்பற்றி பேச முடியாவிட்டால் வழக்காடுபவனைப் பற்றி பேசினால் போதும் என்ற வகையற்ற முறையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் கருத்துக்களையும் மறுக்கமுடியாத திருமங்கலத்தார் "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியலுக்கு இலாயக்கில்லை.'' என்று ஒரேயடியாகத் தள்ளி விட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பற்றிய பேச்சுக்கள் பலப்பல வந்திருக்கின்றன. "அழகாகப் பேசிவிட்டால் போதுமா?'' "அடுக்கு அடுக்காக எழுதினால் போதுமா?'' "கழகங்களை நூற்றுக்கணக்கில் உண்டாக்கினால் போதுமா?'' என்றெல்லாம் நாம் செய்யும் ஒவ்வொன்றையும் பற்றிக் காங்கிரசுக்காரர்கள் கேலிசெய்தபடி இருந்தார்கள். இப்பொழுது கடைசியாக திருமங்கலத்தார் "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியலுக்கு இலாயக்கில்லை'' என்று திருவாய் மலர்ந்திட்டார்.

நம்மைப்பார்த்து அரசியலுக்கு இலாயக்கற்றவர்கள் என்று தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் கூறிவிட்டாரேயன்றி, அரசியலுக்கு இலாயக்காகும் தன்மை என்று கூறவில்லை.

எழுதுவது குற்றம், மேடைகளில் பேசுவது குற்றம், சட்டமன்றங்களில் எதிர்நின்று விவாதிப்பது குற்றம் என்று போய்க்கொண்டிருந்தால், எப்படிப்பட்டவர்கள்தாம் அரசியலுக்கு இலாயக்கானவர்கள் என்று அவர் கருதுகிறார் என்பது தெரியவில்லை,

தடிகளைத்தாங்கிக்கொண்டு அடியாட்கள் சூழ்ந்துவர, தர்பார் நடத்திடும் ஆட்கள்தாம் அரசியலுக்கு இலாயக்கா?

எதிர்தரப்பினர் கூட்டமென்றால் கல்லையும் மண்ணையும் கண்ணாடிப் புட்டிகளில் திராவகத்தையும் வீசியெறியக் காத்திருக்கும் தீரர்கள்தாம அரசியலுக்கு இலாயக்கா?

கள்ளமார்க்கட்டில் கொள்ளை லாபமடித்தவர்கள் கதர் சட்டையை மாட்டிக்கொண்டு வந்தால் போதுமானது, அவர்கள்தாம் அரசியலுக்கு இலாயக்கு என்கிறாரா?

இராஜாக்கள், சர்கள், ஜமின்தார்கள் மிட்டாதார்கள் பணத்தின் உதவியால் காங்கிரசுப் பதவிகளை ஏலம் எடுப்பவர்கள், இவர்கள்தான் அரசியலுக்கு இலாயக்கா?

வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசி, சந்துமுனையில் நின்று சிந்து பாடிடுபவர்கள்தாம் அரசியலுக்கு இலாயக்கா?

அப்படியிருந்தால் அரசியலுக்கு இலாயக்கா?

எழுதத் தெரியாதவர்கள் பேசத்தெரியாதவர்கள் கொடுத்த பொருளை தெளிவுபட விவாதிக்கத் தெரியாதவர்கள், இவர்கள்தாம் அரசியலுக்கு ஏற்றவர்களோ?

ஏதோ அரசியல் தத்துவங்களையெல்லாம் அலசிப்பார்த்து, அரசியல் வரலாறுகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்த பேராசிரியர்போல "திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் அரசியலுக்கு இலாயக்கில்லை'' என்று அவர் தீர்ப்பு கூறிவிட்டார். இந்தப் பிரமாதமான தீர்ப்பைக் கூற அவர் எவ்வளவு நாட்கள் காத்திருந்தாரோ தெரியவில்லை. ஏனென்றால் இந்த அருமையான கண்டுபிடிப்பை மற்ற இடங்களில் அறிவித்தால், அதனுடைய முக்கியத்துவம் குறைந்துவிடுமென்று காஞ்சிபுரத்திற்குச் சென்று அதை வெளியிட்டுள்ளார். "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியலுக்கு இலாயக்கற்றவர்


வடாற்காடு மாவட்ட தி. மு. கழக

**3-வது அரசியல் மாநாடு**

**ஆகஸ்ட் 17, 18 தேதிகளில்**

**திருவண்ணாமலையில் நடைபெறும்.**

★

தலைவர்: அன்பில் தருமலிங்கம்

திறப்பாளர்: கிருஷ்ணமூர்த்தி, B. A. (Hons.)

**அண்ணா**

பொதுச் செயலாளர் **இரா. நெடுஞ்செழியன்** மற்றும் கழக சொற்பொழிவாளர்கள் அனைவரும் கலந்துகொள்வார்கள்.

இரண்டு நாட்களிலும்:

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்

குழுவினரின் நாடகங்கள் நடைபெறும்.

அனைவரும் திரண்டு வாரீர்! கட்டணம்: ரூ. 5, 3, 1.

| | |
|---|---|
| ப. உ. சன்முகம் எம்.எல்.ஏ | முல்லை சத்தி |
| ம. பா. சாரதி எம்.எல்.ஏ. | வரவேற்பு குழுத் தலைவர் |
| செயலாளர்கள். | முருகையன் பொருளாளர். |

...கள் என்பதை அவர்களின் தலைவராம் அந்த அண்ணாதுரை இருக்கிற ஊரிலேயே போய் சொல்லிவிடுகிறேன்'' என்று வீராப்புடன் திருமங்கல வீரர் காஞ்சியில் நடந்த கூட்டத்தில் தமது தீர்ப்பை வழங்கியுள்ளார். சிங்கத்தின் குகையிலே போய் சிங்கத்தை தட்டியெழுப்புவது என்பார்களே, அதைப்போல திருமங்கலத்தார் செய்திருக்கிறார்.

சிங்கத்தின் குகையருகே போய் சத்தமிடுவதாலேயே, சிறு நரியின் ஊளை சிங்கத்தின் கர்ச்சனைக்கு ஈடாகிவிடாது!

காஞ்சிபுரத்தில் இருக்கிறோம் என்பதை அவர் மறக்கவில்லை, காஞ்சிபுரத்தில் அண்ணா இருக்கிறார் என்பதையும் மனதில் வைத்துத்தான் அவர் அப்படிப்பேசினார். திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் தாக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது? சட்டசபையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வந்துள்ளார்கள் என்பதுதான்! சட்டசபையில் கழகத்தினர் அப்படியொன்றும் அதிகமில்லை, 15 பேர்கள்தாம், அது கூடச் சங்கடமாக அவர்களுக்கு இருக்கிறது. காஞ்சிபுரத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் பேசும்பொழுது தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் கூறியுள்ளார் ''சென்ற தேர்தலில் இத்தொகுதியிலிருந்து தி. மு. க. தலைவரைத் தேர்ந்தெடுத்தது தவறு என்பதை காஞ்சி மக்கள் உணர்வார்கள்'' என்று.

அரசியலுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இலாயக்காக இல்லையென்று முடிவு கட்டியது போல, வோட்டர்களாக இருக்க காஞ்சித் தொகுதி மக்களும் இலாயக்காக இல்லை என்றும் அவர் கூறிவிடலாம்! அண்ணாவைத் தேர்ந்தெடுத்த மகத்தான ''தவறை'' அவர்கள் செய்துவிட்டார்களே!

அறிஞர் அண்ணாவை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து காங்கிரசுப் பத்திரிகைகளே ''வருக அண்ணாதுரை!'' என்று வரவேற்று எழுதின. ''அண்ணாதுரை அவர்கள் வந்திருப்பதால் சட்டசபை விவாதங்களின் தரம் உயருகிறது'' என்று பம்பாய் பத்திரிக்கைகள் எழுதின.

காஞ்சிபுரம் தொகுதியில் அண்ணாவை எதிர்த்துப்போட்டியிட்டுத் தோல்வியடைந்த காங்கிரசு அபேட்சகரே, ''அண்ணாதுரை சட்டசபைக்குச் செல்லவேண்டியவர்'' என்று தன் தோல்வியைச் சமாதானப் படுத்திக்கொண்டார்.

ஆனால் அவர்களுக்கெல்லாம் தெரியாத ஒன்றை, காஞ்சிபுரத் தொகுதி மக்கள் செய்த தவறை எடுத்துக்காட்ட இந்தத் திருமங்கலத்துப் பெரியவர் சென்றார். தாம் கண்டுபிடித்த உண்மைகளை உலகுக்கு அறிவித்துவிட்டார்! பாவம்! அவருடைய நிலைமை நமக்குப் புரிகிறது!

அவர் சென்ற தேர்தலில் திருமங்கலம் தொகுதியில் சென்னை சட்டசபைக்கு போட்டியிட்டார், பாழாய்ப்போன திருமங்கலம் தொகுதி மக்கள் ''தவறுதலாக'' அவரை எதிர்த்து நின்றவர் பெட்டியில் ஓட்டுகளைப் போட்டு தோற்கடித்துவிட்டார்கள்! அதிக வித்தியாசமில்லை, 5000 ஓட்டுகள்தாம் இவருக்குக் குறைவு! காஞ்சிபுரத்துத் தொகுதி மக்களைப்போல திருமங்கலம் தொகுதி மக்களும் ஒரு தவறு செய்து விட்டார்கள். அவ்வளவுதான்!

இழித்தும் பழித்தும் பேசப்படுவதால் ஒரு இயக்கம் அழிந்துவிடுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த அப்பொழுதே அழிந்துபட்டிருக்கும். இதைவிட அதிகமான வசவுக்கும் பழிச்சொற்களுக்கும் ஆட்பட்டு வளர்ந்தவர்கள் நாம்! ஆகத் திருமங்கலத்தாரின் திருவாய் மொழிகள் நம்மை ஒன்றும் செய்யாது!

ஒருவேளை, அவர் இருக்கிற, அவர் நினைக்கிற அரசியலுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இலாயக்கு அற்றவர்களோ என்ற எண்ணம் உண்டாகிறது!

# தபால்-தந்தி ஊழியர் வேலைநிறுத்தம்.

தபால்-தந்தி ஊழியர்களும் மற்றும் மத்திய அரசாங்கத்தில் பணியாற்றும் சில பிரிவினரும் வருகிற ஆகஸ்ட் 9ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்வதற்கு முடிவெடுத்துள்ளார்கள்.

வேலை நிறுத்தம் என்ற முடிவை அவர்கள் விளையாட்டாகவோ வேடிக்கையாகவோ எடுத்து விடவில்லை. பல ஆண்டுகளாகத் தங்களுக்குக் குற்ற குறைகளைப் பலவகைகளிலும் எடுத்துச் சொல்லிச் சொல்லி, அரசாங்கத்தினர் கவனிப்பார்கள் என்று எதிர்பார்த்து, கடைசியாக ஏதும் நடைபெறாத நிலையில், தங்களது குறைகளுக்கு முடிவு காணக் கடைசி முயற்சியாக இந்த வேலை நிறுத்தம் என்ற போராட்டத்தில் இறங்கியுள்ளனர். விலைவாசிகள் ஏற ஏற, வாங்குகிற சம்பளத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில், பொருளாதார நெருக்கடிகள் தருகிற தொல்லைகளைத் தாங்கமுடியாமல், வேலைநிறுத்தம் என்ற பொறுமையின் எல்லைக்கு அவர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்! அவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியது வேடிக்கையாக அல்ல, வேதனை தாங்கமாட்டாமல்! அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டது அரசாங்கத்தைப் பயமுறுத்த அல்ல, பயமுறுத்துகிற வாழ்க்கைப் பளுவை-விலை ஏற்றங்களைச் சமாளிக்க!

தபால்-தந்தி ஊழியர்களின் குறைபாடுகள் அரசாங்கத்திற்குத் தெரியாதா என்றால் நன்றாகத் தெரியும். இரண்டரை ஆண்டுகாலமாக அவர்களுடைய சங்கம் குறைகளை தெரிவித்தபடிதான் இருந்திருக்கிறது. ஒருபுறம் விலைவாசிகள் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று ஏறிக் கொண்டே போகிறது, அரசாங்கம் தருகிற குறைந்த சம்பளமோ இம்மியளவும் மாறாமல் இருக்கிறது. விலை உயர்வுக்குத்தக்க அளவுக்கு சம்பளங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பிரதம மந்திரி பண்டித நேருவுக்கே வேண்டுகோள் விடுத்தார்கள். ஒருவர் இருவரால் அனுப்பிதால்கூடப் போதாது என்று, 2½ லட்சம் ஊழியர்கள் சேர்ந்து கையெழுத்திட்டு வேண்டுகோளை அனுப்பினார்கள்.

அவர்கள் அனுப்பிய மனுக்கள் குப்பைக் கூடையில் போடப்பட்டன. விடுத்த வேண்டுகோள்கள் அலட்சியப் படுத்தப்பட்டன, எழுப்பிய குரல்கள் கேட்கப்படவில்லை, சூழ்ந்துள்ள குறைகளைத்தீர்க்க அரசாங்கம் வழிகாணவில்லை.

தபால் தந்தி பிரிவில் மிகக் குறைந்த சம்பளம் வாங்கும் ஏழை ஊழியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஈ. டி. என்ற பிரிவின்கீழ் சுமார் 80,000 ஊழியர்கள் மாதம் 20 ரூபாய்க்கு மேற்படாத சம்பளத்தில் வேலை பார்க்கிறார்கள்! 60,000 ஊழியர்கள் 30லிருந்து 35 ரூபாய்க்குள்ளாகச் சம்பளம் வாங்குகிறார்கள்! இவ்வாறு பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் 20 ரூபாய் சம்பளமும் 30 ரூபாய் சம்பளமும் வாங்கிக்கொண்டு, விலைவாசிகள் நஞ்சென ஏறிக் கொண்டிருக்கும் காலத்தில், சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். விலைவாசிகள் ஏற்றத்துக்குத் தக்க அளவுக்கு சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டால்தான், அவர்களால் அந்தச் சம்பளங்களைக் கொண்டு வாழமுடியும்.

தபால்-தந்தி ஊழியர்களும், மத்திய அரசாங்க ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது ''தேசிய விரோத செயலாகும்'' என்று பிரதம மந்திரி பண்டித நேரு அறிவித்துள்ளார். இவர்களின் வேலை நிறுத்தத்தைத் தேசிய விரோத செயல் என்று கண்டிப்பதற்குமுன், இவர்களை வேலை நிறுத்தத்திற்குத் தூண்டிய விலைவாசி உயர்வுகளை தேசிய விரோதமாகப் பாவித்துத் தடுத்திருக்க வேண்டும். குறைந்த சம்பளக்காரர்களின் குறைபாடுகளைத் தீர்க்காதது தேசிய விரோத செயலாக நினைத்திருக்கவேண்டும். தொல்லைக்கு ஆளானவர்கள் குறையிரந்த பொழுதெல்லாம் அவர்களை அலட்சியப் படுத்தியது தேசிய விரோத செயலாகப் பட்டிருக்க வேண்டும். அடங்கிக் கிடப்பவர்கள் வாழ வழி கேட்கும் பொழுது மட்டும் ''தேசிய விரோதம்'' என்று சொல்லி விட்டால் போதாது. ஆள்பவர்கள் செய்யும் ''தேசிய விரோதமான'' தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

தபால்-தந்தி ஊழியர்களையும், நாட்டையும் மேலும் அல்லற்படுத்தாமல், ஊழியர்களுடைய குறைகளை உடனடியாக மத்திய அரசாங்கம் தீர்த்துவைக்குமென்று நம்புகிறோம்.

## வினவும் விளக்கமும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பின் காரணமாகக் கற்பிக்கப்படும் பேதங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கிறது. தாம் மற்ற மக்களைவிட உயர்ந்த சாதியில் பிறந்துவிட்டதாக நினைத்து, மற்றவர்கள் அருகில் வந்தாலும் குற்றமென ஒதுங்கிச் சென்று, மக்களை மக்களாக மதிக்காமல் ஆணவத்துடன் நடந்து கொள்ளும் போக்கை திராவிட முன்னேற்றக்கழகம் கண்டிக்கிறது. அத்தகைய போக்கு எங்கு காணப்பட்டாலும் கண்டிக்கிறது. பார்ப்பனீயம் என்பது பார்ப்பனரிடம் மட்டுமல்ல பார்ப்பனரல்லாதார் சிலரிடமும் இருக்கிறது. அதுவும் கண்டிக்கப்படவேண்டியதே!

பிறப்பினால் பேதங் கற்பிக்கும் முறையைக் கண்டிப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் சிறிதும் பின் வாங்கவில்லை. ஒரு கொள்கையைச்சொல்லி, அதற்கு முரண்பாடாக நடந்து கொள்வதுமில்லை. ஆனால் ஒரு கொள்கையை முதலில் சொல்லி, பின் அதற்கு மாறுபட்ட திட்டங்களைத் தயாரித்துக்கொண்டு, இடையில் அவசிய மேற்பட்டால் அவர்கள் போட்ட திட்டங்களுக்கு எதிராக அவர்களே சிறிது காலம் வேலைசெய்து விட்டு, மீண்டும் பழைய திட்டங்களின் பக்கம் அவர்கள் வந்துவிடுகிறார்கள், அத்தகைய தெளிவற்ற போக்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளாததில் தவறு ஒன்றுமில்லை.

—இரா. நெ.

## மன்றம் ஏஜண்டுகளுக்கு

குறிப்பு:—8-8-57 தபால் இலாகாவில் வேலை நிறுத்தம் நடந்தால், ''மன்றம்'' விற்பனையாளர்கள்...பக்கத்திலுள்ள ரயில் நிலைய விபரம் கண்டு கடிதம் எழுதினால் ரயில் மூலம் மன்றம் இதழ்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும். —நிர்வாகி மன்றம்.

... சென்னை-1 (தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.